# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மே 2000 ஜீவியம் 6 மலர் 1**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| மனித சுபாவம் | 2 |
| இம்மாதச் செய்தி | 17 |
| லைப் டிவைன் | 18 |
| சிறு குறிப்புகள் | 28 |
| அன்பர் கடிதம் | 30 |
| சாவித்ரி | 31 |
| அஜெண்டா | 33 |
| பகவானுடைய இதர நூல்கள் | 35 |
| லைப் டிவைன் - கருத்து | 39 |
| அகந்தை விரிவடைந்தால் - வாழ்க்கை சுருங்கும் ஆன்மா மலர்ந்தால் - வாழ்க்கை விரிவடையும் | 41 |
| தமிழாசிரியர் | 47 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 60 |


❋ ❋ ❋

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருட சந்தா ரூ.60/-**

# மனித சுபாவம் III

கர்மயோகி

**நீண்ட நாளாக உனக்குப் பேரும் புகழும் வாங்கிக் கொடுத்த திறமைகளையும் அளவுகடந்து அபிவிருத்தி செய்யலாம்.**

⁕ ⁕ ⁕

கருவி செயலின் சிறப்பை உயர்த்தும். தெளிவு அறிவின் உயர்வைப் பரிமளிக்கச் செய்யும். நயம், அழகை மேலும் அழகாகக் காட்டும். இனிமையான சொல், சுவையான உணவுக்குச் சுவை கூட்டும். பிரியம் கடமையை இனிக்கச் செய்யும்.

புகழ் பெற்ற பேராசிரியர். அவர் வகுப்புக்கு மாணவர்கள் ஆர்வமாக வருவார்கள். அவரைப்போல் எதிர்காலத்தில் தாம் வரவேண்டுமென நினைப்பார்கள். அவருடைய சொற்பொழிவு களுக்கு, அவர் படித்த சிறப்பான புத்தகங்களிலிருந்து அழகான பகுதிகளை இணைத்தால் நல்லது எனத் தெரிந்து, அதைச் செய்தவுடன் வெறும் டிவி, கலர் T.V. ஆனதுபோல் வகுப்பு மாறியது. பேராசிரியருக்குப் பேரானந்தம். என்ன நடக்கிறது என்று அறியாமல் மாணவர்கள் தேன் குடித்த நரிபோலானார்கள்.

பேச்சைக் கருத்து உயர்த்தும், செயலை அறிவு உயர்த்தும், நட்பை விஸ்வாசம் உயர்த்தும். கருத்து, முறைமை, பிரியம், இனிமை, இதம், இங்கிதம், கருவி, திறமை ஆகியவை பாதியோ, கால் பாகமோ இருந்தால் புகழ் பெறமுடியும். குறைவானதை நிறைவுபடுத்தினால் தரம் உயரும். ஒன்று முழுமையாக இருந்தால், அடுத்த அம்சத்தைச் சேர்த்தால், அழகும் பெருமையும் கூடும். எதையும் உயர்த்த முடியும். ஏனெனில் எந்த உயர்விலும் உயர்வுக்குரிய அம்சம் ஒன்று தானிருக்கும். அதுவும் குறைவாக இருக்கும்.



**உன்னதமான திறமையும், அடுத்த உயர்ந்த நிலையி லிருந்து பார்த்தால், பலமடங்கு உயரக்கூடியது எனத் தெரியும்.**

⁕ ⁕ ⁕

சிறப்பான கிராம வாழ்வில் நகர வாழ்வின் அம்சங்களைச் சேர்த்தால் ஏற்படும் மாற்றம் பெரியது. 20 வருஷமாகத் தொழில் செய்து 18பேருக்குத் தொழில் வைத்துக் கொடுத்தவருக்குத் தம் திறமை பற்றிப் பெருமையுண்டு. 75வருஷ வியாபாரத்தில் முதலாளியே பாக்டரியில் நாள் முழுவதும் நின்று வேலை வாங்குகிறார். திறமைக் கும் சிக்கனத்திற்கும் பேர் போன இடம். அவர்கள் திறமையை மெச்சாதவரில்லை. நாட்டிலே முதல் 15 பேரிலுள்ள ஸ்தாபனம். பனி யாக்கள் நடத்துவது. 1ரூபாய் அதிகச் செலவு செய்துவிட்டால் சேர்மன் முதற்கொண்டு வந்து விடுவார். சிக்கனத்திற்கு அம்மாநிலத்தில் உதாரணமாக அவர்களைச் சொல்வார்கள். இவர்களிடம் போய் 'உங்கள் கம்பனியில் விரயத்தை விலக்க உதவுவோம்' என்றால் அவர்கள் சிரிக்கிறார்கள். 42000 ரூபாய்க்கு வந்த வேலையை 30நாள் பேரம் செய்து 21,400க்கு முடித்தவர் தம் திறமையை வியந்து கொண்டார். அவர் கூட்டாளி அதைக் குறைக்கலாம் என்றது அவரைச் சிரிக்க வைத்தது. இவையெல்லாம் உயர்ந்த திறமைகளே.

கிராமத்தில் வாய்க்கணக்குப் போடுபவர்கள் பிரபலமாக இருப் பார்கள். அவர்கள் திறமையை அகிலம் புகழும். அடுத்த உயர்ந்த நிலை கால்குலேட்டர். எந்த வாய்க்கணக்குப் புலியும் கால்குலேட்டருடன் போட்டியிட முடியாது. இது அடுத்த உயர்ந்த நிலை. வேலைகளைச் செய்யும் முறையுண்டு. முறைகள் பல நிலைகளில் அமைந்துள்ளன. இன்றிருப்பதை இதே முறையில் உயர்த்த முடியாது என்பது உண்மை. அடுத்த உயர்ந்த முறையைப் பயன்படுத்தினால் அளவு கடந்து உயர்த் தலாம் என்பது உண்மை, உயர்வு கருவியைப் பொருத்தது. வாயால் கூவுபவன் ஒலிப் பெருக்கியுடன் போட்டியிட முடியாது. அதேபோல் மேற்சொன்ன தொழிலதிபர்களை அணுகிப் பேசியபொழுது அவர்கள்

நம்பவில்லை. ஏதோ ஒரு வழியாகக் கொஞ்சம் அவர்கள் இடம் கொடுத்தபொழுது நடந்தது வேறு:-

- ரூ. 6000 வியாபாரத்தில் தினமும் 100ரூபாய் மிச்சப்படுத்த முடியாது என்றவர் தினமும் ரூ. 1100 மிச்சப்படுத்தினார்
- விரயமே இல்லை என்றவர் தம் மாத வருமானமான ரூ. 2 லட்சத்தை விரயத்தை அழித்து 2¾ லட்சமாக்கினார்
- பனியா தம் கம்பனியில் சிக்கனம் செய்ததால் 1½ கோடி அதிக லாபம் வந்ததைக் கண்டார்.
- 42 ஆயிரத்தை 21,400ஆகக் குறைத்துப் பேசியவர் கூட்டாளி அதிலும் 400 ஐக் குறைத்தார் என்று ஆச்சரியப்பட்டார். 21 ஆயிரத்தை 8 ஆயிரமாக்கிய அனுபவமுள்ளவர் கூட்டாளி என அவருக்குத் தெரியாது.

**உணர்வால் ஏற்பட்ட உறவைப் பொருளால் பூர்த்தி செய்தால் அது பரிமளிக்கும்.**

❊ ❊ ❊

அறிவால் நட்பு ஏற்படுவதுண்டு. உணர்வே நட்புக்குப் பிரதானம். ஆனால் பொருளே இவற்றிற்கு அஸ்திவாரம். அஸ்திவாரமில்லாமல் மேல் மட்டத்தில் ஏற்படும் நட்பு அது ஏற்பட்ட சந்தர்ப்பம் விலகியவுடன் மறைந்து போகும். உணர்வு மறையும். பொருளால் பூர்த்தி செய்யப்பட்டி ருந்தால் உணர்வு மறையும்பொழுது பொருள் உறவை மீண்டும் உயிர்ப்பிக்கும்.

சென்ற நூற்றாண்டில் அரச குடும்பங்கள் எதிரியை வெல்லும் முறைகளில் முக்கியமாகக் கையாண்ட முறை சம்பந்தம் செய்வது. ஓர் அரசனின் பெண் எதிரியின் மருமகளாய்விட்டால் எதிர்ப்பு மறைகிறது. பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து, ஹாலண்ட், இத்தாலி ஆகிய நாடுகள் இக்கொள்கையைப் பயன்தரும் வகையில் பல நூற்றாண்டு பின்பற்றின.



நண்பர்கள் வேறு ஊருக்குப் போய்விட்டால் நட்பின் தீவிரம் குறைகிறது. வியாபாரத் தொடர்போ, அதிகாரத் தொடர்போ, பலன் பெறும் மற்ற தொடர்போ இருந்தால் நட்புக் குறைவதில்லை. நெருக்க மாகவுமிருக்கும். நட்பு உயர்ந்தது. வெறும் நட்பு நெடுநாளைக்குத் தீவிரமும் இனிமையும் குறையாமல் இருப்பதுண்டு. ஆனால் அது அரி பொருள். பொருள் செறிவானது. வளமானது. நட்புக்கும் உயிர் கொடுப்பது. உயிருக்கும் திறனளிப்பது. நட்பு மிளிரும். பொருள் புதைந்த நிலையிலும் மிளிரும் நட்புக்கு அஸ்திவாரமாக ஆதரவளிக்கும்.

**நீ ஊதாரியாகி உன் சொத்தையெல்லாம் அழித்தவன் என்றால் கடுமையாக உழைக்க நீ முடிவு செய்தால் உழைப்பால் நீ உயரலாம் என்பதை அறிய வேண்டும்.**

❊ ❊ ❊

அருணகிரி நாதரும் விப்ரநாராயணரும் தாசி வீடே கதியாக இருந்தவர்கள். அடிப்படையான மாற்றம் ஏற்பட்டு அடியாராகவும், ஆழ்வாராகவுமானார்கள். இதை எல்லோரும் செய்ய முடியாது என்பது உண்மை. அடிப்படையில் மாற வேண்டும் என முனைபவரால் முடியும். 'நான் இத்தனை வருஷம் இப்படியே இருந்துவிட்டேன், இனிமேல் மாற முடியுமா?' என்று மனம் தளர்பவரை நோக்கி 'மாற முடியாது என்று நம்பினால் மாற முடியாது. முடியும் என்று முயன்றால் முடியும்' என்று ஆயிரம் உதாரணங்கள் சொல்கின்றன. அழிந்து போன பதினாயிரம் பேரைப் பின்பற்றுவதா, மாறிய ஆயிரம் பேரை உதாரணமாக எடுத்துக் கொள்வதா என்பதுதான் பிரச்சினையே தவிர முடியுமா என்பது கேள்வியில்லை.

அநேகமாக எந்த ஊரிலும் அழிந்து போனவர் அநேகம் பேரிருப்பார்கள். திருந்தியவர் ஓரிருவர் உண்டு. திருந்தியவர் 'முடியும்' என்பதைத் தம் வாழ்க்கையால் விளக்குகிறார்.

**உன் கம்பனி ஆபீசர் எல்லாம் ஒரு வருஷத்தில் உன்னை விட்டுப் போய் விட்டார்கள் எனில் (inter -**

**personal relationship) உயிருள்ள உறவுக்குரிய பயிற்சியை நீ மேற் கொண்டால் உன்னைவிட்டு இனி ஒருவரும் போகமாட்டார்கள்.**

* * *

பயிற்சி என்பது 15வருஷ அனுபவத்தை, 30வருஷ அனுபவத்தை ஓரிரு வருஷத்தில் தருவது. ஒரு மாதத்திலும் தரக்கூடியது. அது பயிற்சியின் தரத்தைப் பொருத்தது. மார்க்கட்டிங் என்பதை அனுபவத்தால் செய்கின்ற கம்பனியில் அதற்குரிய பயிற்சியைப் பெற்றால் வசூல் அதிகமாகும், விற்பனை அதிகமாகும். அதிகமாகும் எனில் இருமடங்காகும். விரயம் குறையும். இப்பயிற்சியை ஒரு முக்கியமான ஆபீசருக்கு - **Marketing Manager** - ஒரு மாதத்தில் கொடுக்கிறார்கள். மேல் நாட்டில் இரண்டு நாளில் தருகிறார்கள்.

ஆபீசர்களிடம் எப்படிப் பழகுவது என்பதைப் பயிற்சியால் பெறா விட்டால், கம்பனியில் ஒருவருமிருக்க மாட்டார்கள். பயிற்சி பெற்றால் ஒருவரும் போக மாட்டார்கள். பயிற்சிக்கு அந்த முக்கியத்துவம் உண்டு.

14வருஷம் பள்ளியிலும், கல்லூரியிலும் ஆங்கிலம் படித்துப் பேசவோ, எழுதவோ வருவதில்லை. 100 நாளில் பேச, எழுத இதைப் பல நாடுகளில் பயிற்சியாகத் தருகிறார்கள். அது பயிற்சிக்குரிய சிறப்பு.

**நீ எவரோடும் ஒரு நாளைக்கு மேல் பழக முடியவில்லை என்றாலும், உன் போக்கை மாற்றிக் கொள்ள முடியும் என்றால் நூறு நண்பர்களும் ஏற்படுவார்கள்.**

* * *

**நண்பர்கள் எப்படிச் சேருகிறார்கள், எப்படி விலகுகிறார்கள் என்பது முக்கியமான விஷயம்.**

**(Leadership) தலைமையுள்ளவனைச் சுற்றிப் பலர் இருப்பார்கள்.**

**(Pleasant personality) இனிமையானவரை அனைவரும் நாடுவார்கள்.**

**பணம், அந்தஸ்து, திறமையுள்ளவர்க்குப் பல நண்பர்களிருப்பார்கள்.**



**இவை குறிப்பான சந்தர்ப்பங்கள்.**

**இரகஸ்யத்தை வைத்துக் கொள்ள முடியாதவன், கோள் சொல்பவன், நம்பிக்கையில்லாதவன், அதிக பயமுள்ளவன், தாழ்ந்த குடும்பத்துப் பையன், எந்தத் திறமையுமில்லாதவன் போன்றவரை விட்டு நண்பர்கள் உடனே விலகுவார்கள்.**

**ஒன்று உச்ச கட்டம், அடுத்தது தாழ்ந்தது.**

**இவை பெரிய விவாதத்திற்குரியவை.**

**இவை இரண்டும் போகப் பெரும்பாலும் ஒரே தகுதியுள்ள இருவரில் ஒருவருக்கு ஏராளமான நண்பர்களும், அடுத்தவர்க்கு நண்பர்களேயில்லை என்பதும் உண்டு நண்பர் இல்லாதவர் பல நண்பர்களைப் பெறும் வழியுண்டா? உண்டு.**

கீழ்க்கண்டவற்றை அவரால் பயில முடியுமானால் அது நடக்கும்.

1. எவர் பேசும் பொழுதும் குறுக்கே பேசக்கூடாது.
2. யாருடைய கருத்தையும் மறுத்துப் பேசும்பொழுது கருத்திற்கு மாற்றம் தெரிவிக்கலாம். அதனால் கருத்துடையவரைக் குறைத் துப் பேசக்கூடாது. நாம் பிறரைக் குறைவாக நினைக்கக்கூடாது.
3. பிறருடைய குடும்பம், ஜாதி, சொந்த விஷயங்களைத் தெரிந்து கொள்ளவே கூடாது.
4. காரசாரமான விவாதத்தில் கருத்து வேற்றுமையிருக்கலாமே தவிர விவாதம் மற்றவரைத் தீண்டக்கூடாது. அரசியல், வழிபாடு, பணம் ஆகியவற்றில் விவாதம் செல்லாவிட்டால் அந்தச் சங்கடம் வாராது.
5. பிறர் பேசுவதில் உள்ள நல்ல கருத்தை நம் மனம் ஏற்க வேண்டும். சந்தர்ப்பப்பட்டால் அதைச் சொல்ல வேண்டும்.
6. பொறாமைக்கு இடம் இல்லை.
7. நம் நண்பர்களைப் பற்றிப், பிறர் சொல்வதை ஏற்கக் கூடாது. எதையும் நேரடியாகப் பேச வேண்டும்.
8. நண்பர்களிடம் மறைக்க வேண்டிய காரியங்கள் செய்வதைத்

தவிர்க்க வேண்டும்.

9. நண்பர்களை நினைத்தால் மனம் இதமாக இனிக்க வேண்டும்.
10. போலி நட்பு, உபசாரம், உறவு ஆகியவற்றை விலக்க வேண்டும். அறவே விலக்க வேண்டும்.

**உன் திறமைகளை நீ அறிவதுபோல், உன் குறைகளை நீ அறிந்தால் உனக்குப் பெரு முன்னேற்றமுண்டு.**

* * *

M.A.படித்து வேலையில்லாமலிருப்பவனுக்கு வேலை தேடிக் கொடுக்கப் போனால் சாதாரணமாக அன்று (1978) தனியார் துறையில் இவன் போன்றவர்க்கு ரூ.100 சம்பளம் என்பதை மறந்து தன் நண்பன் சர்க்காரில் பெறும் சம்பளம் தான் பெற வேண்டுமென நினைத்து அதையே அவன் மனம் நாடியது. நாட்டின் நிலையில் இவன் வேலை தேடி ஓர் அரசியல்வாதிக்குப் பெரிய தொகையைக் கொடுத்து ஏமாந்ததுதான் மிச்சம். வேண்டியவர்கள் இருந்ததால் ரூ. 250 சம்பளம் கிடைத்தது.

இளைஞன் நாணயமானவன். இட்ட வேலையைச் செய்யும் பாங்குடையவன். ஆனால் தானே பொறுப்பேற்று ஒரு சிறிய வேலையையும் செய்யும் திறமை இல்லாதவன். நல்லவர்களிடம் வேலை செய்ததால் இவனுக்கு இருந்த இடமெல்லாம் மார்க்கட் ரேட்டை விட இரண்டு, மூன்று மடங்கு சம்பளம் என 250இலிருந்து 5000 வரை இன்று உயர்ந்தது. கடந்த 15 வருஷமாக இவன் வேலை செய்த இடங்கள் பல எங்குமே நாணயமானவன் என்று பெயரெடுத்திருக் கிறானே தவிர திறமைசாலி எனப் பெயர் வாங்கவில்லை. அத்துடன் இந்த நாளில் முக்கியமாகத் தேவைப்படுவது லேபர் மேனேஜ்மெண்ட். இவனுக்கு அது வராது. இராசியோ, இவன் போகுமிடமெல்லாம் ஸ்டிரைக் வரும். முதலாளியிடம் விஸ்வாசமில்லாதவன் எனப் பெயர். வேலை என்று செய்தால் எவ்வளவு செலவாயிற்று, எவ்வளவு வந்தது, இலாபமா, நஷ்டமா எனக் கணக்குப் போடுவதில்லை. பொதுவாக வேலை செய்யத் தெரியும். பலனைக் கொண்டு வரமுடியாது என்றால்



இவன் சூப்பர்வைசராக இருக்க முடியாது, தொழிலாளியாகவே இருக்க முடியும், இருப்பதோ மானேஜர் பதவி.

எந்தக் கம்பனியில் வேலை செய்தாலும் அங்குத் தன்னை முதலாளி ஸ்தானத்தில் மனதால் வைத்துக் கொள்வான். கம்பனியில் நடக்கும் அவ்வளவு வேலைகளையும் தானே செய்ததாகச் சொல்வான். எவர் ஒரு வேலையைச் செய்தாரோ அவரிடமே தான் அந்த வேலையைச் செய்ததாகப் பேசுவான். பதினைந்து வாக்கியம் பேசினால் 'நான்' 20 முறை வரும். இவனுக்குச் சில திறமைகள் உண்டு, சில குறைகள் உண்டு. தன் திறமைகளைக் கருதுவதுபோல் தன் குறைகளைக் கருதினால் அவற்றை விலக்க முன் வந்தால், இன்று இவனே ஒரு முதலாளியாயிருக்கலாம், அல்லது இவனுக்கு ஏற்பட்ட தொடர்புகளால் இதைப் போல் இருமடங்கு சம்பளம் பெறலாம்.

**நான் M.A. படித்தவன்.**

**நான் நாணயமானவன்.**

**நான் கெட்டிக்காரன்.**

**என் நண்பர்கள் அதிகம் சம்பாதிக்கிறார்கள்.**

**நான் அந்த வேலைக்குப் போனால் ஏராளமாகச் சம்பாதித்திருப்பேன்.**

**நான் உழைப்பாளி.**

**எனக்கு அதிகம் கொடுக்க வேண்டும்.**

**நான் மட்டுமே இங்கு உழைக்கின்றேன்** (என்று இவன் நினைக்கும்பொழுது இதற்குப் பதிலாக),

**நான் போன இடமெல்லாம் ஸ்டிரைக்.**

**நான் எடுத்த காரியம் எதுவும் முடியவில்லை.**

**நான் முடித்த காரியம் எதுவும் இலாபம் தரவில்லை.**

**மானேஜருக்குரிய தைரியமில்லை.**

**லேபர் மானேஜ்மெண்ட் எனக்கு வாராது.**

**திட்டமிட்டு (planned work) வேலை செய்ய எனக்குத் தெரியாது.**

**என்னை எந்தப் பெரிய கம்பனி முதலாளியும் பார்த்தபொழுது பிரியப்படவில்லை.**

**நான் ஓர் இடத்தில் 3000ரூபாய் பெற்றுச் செய்ய முடியாததை 1500ரூபாய் சம்பளக்காரன் அழகாகச் செய்கிறான் எனச் சிந்தித்தால் M.A. படிப்பிருப்பதால் இவனுடைய குறைகள் அனைத்தையும் விலக்க முடியும். குறைகளை விலக்கலாம். Attitude மனப்போக்கு, குறையை அறியாதது, தன்னை முக்கியமாகக் கருதுவது.**

**சூட்சுமம் திறமையில் இல்லை, மனப்போக்கில் உள்ளது.**

**ஒரு சட்டத்தைக் கடுமையான முறையில் அமுல் செய்யாவிட்டால் நடைமுறையையே சட்டமாக மனம் கருதும். அது விவரமில்லாதவர் செயல்.**

* * *

போன் பில் கட்டாவிட்டால் ஓரிரு நாள் தாமதித்தும் பெற்றுக் கொள்வார்கள். நிலத்திற்கு வரி (வாய்தா)நேரத்தில் கட்டாவிட்டாலும் ஓரிருமாதம் கழித்தும் பெற்றுக்கொள்வார்கள். பள்ளியில் மாணவனுக்கு 75% வருகையில்லாவிட்டாலும் பரீட்சைக்கு அனுமதிப் பார்கள். நடைமுறையில் சட்டத்தைத் தளர்த்துவது இதுபோல் பல்வேறு இடங்களிலும் நடப்பதுண்டு. இதையே ஒரு "சட்டமாக" மனம் நினைப் பது சராசரிக்குக் கீழேயுள்ள மனிதன் மனநிலை. படித்தவர், உயர்ந்தவர், முன்னேற்றத்தை விரும்புபவர், முன்னோடியாகத் தம்மைக் கருதுபவர், இலட்சியவாதி ஆகியவருக்கு இம்மன நிலை சரி வாராது. அவர் களைச் சராசரி மனிதராக்குவதுடன் மேலும் கீழே கொண்டு போகும்.

**எந்த நிலைக்குரிய நடைமுறையை உன் மனம் ஏற்கிறதோ அந்நிலையை நீ அடைவாய் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.**

**உன் வலிமை எது என்று அறிந்து அதைப் பாராட்ட வேண்டும்.**



**உன் பலஹீனம் எது என அறிந்து அது வெளிப்படும் திட்டங்களை நீ விலக்க வேண்டும்.**

* * *

நிர்வாகத் திறமையில்லாதவர் மேனேஜராகப் போவது, பேசத் தெரியாதவர் ஆசிரியராகவோ, வக்கீலாகவோ, அரசியல்வாதியா கவோ போவது சரியில்லை என எவரும் அடுத்தவருக்குச் சொல்ல வேண்டாம் என்றாலும், பேசத் தெரியாத வக்கீல், நிர்வாகத் திறமையில்லாத மேனேஜர் பலரை நாம் அறிவோம்.

முதல் ராங்க் வாங்கியவருக்குத் தம் திறமை தெரியாமல் குமாஸ்தா வேலைக்குப் போனார். முதல் ராங்க்கிற்குள்ள மரியாதையை எடுத்துச் சொன்ன பிறகு பேராசிரியர் வேலைக்குப் போய் பிரபலமானார். இவருடைய தொழிலில் உள்ள சிறப்பெல்லாம் இவரைத் தேடி வந்தது. இவர் தேடிப் போனால் கிடைத்தது. தம் திறமையைத் தாம் அறியாதவர். இவர் தொழிலில் சிறப்பு வந்த பின் இவருக்கு ஒரு யோசனை வந்தது. தொழில் செய்யப் பிரியப்பட்டார். அன்று தம் திறமையை அறியாததுபோல் இன்று தம் குறையை அறியவில்லை. தகப்பனார் வாழ்நாள் முழுவதும் கடனில் கழித்தவர். வாங்கிய ஓர் இடத்திலும் திருப்பிக் கொடுத்ததில்லை. பாட்டனார் கடன் பெற்றுத் திவாலானார். தம் குடும்பத்திற்குக் கடன் குறை, அதனால் தமக்குக் கடன் வாங்கும் விஷயம் குறையாகும் என அறிய முடியவில்லை. கடன் பெற்று தொழில் ஆரம்பித்து, கடன் மலையாகப் பெருகி, கர்மம் தன் வலிமையை நிலை நாட்டியது.

இவர் படித்ததற்கு மேல் படிக்க முடியாது. இவர் படும் கஷ்டத்திற்கு மேல் கஷ்டப்பட முடியாது. இவ்வளவு அனுபவம், படிப்பிருந்தும் இந்தச் சாதாரண விஷயங்கள் நடைமுறையில் விளங்குவதில்லை என்பதே நாம் பார்ப்பது

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் நம் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால், இப்படிப்பட்ட உண்மைகள் வெளிவரும். எளிமையாக

எல்லோரும் அறிந்த உண்மை எனப்பட்டாலும் நடைமுறையில் பெரும்பலன் தரக்கூடியது.

**விஷயமில்லாத அதிகாரத்தை வற்புறுத்துவது எதிர்காலத்தில் தோல்விக்கு வித்தாகும்.**

❈ ❈ ❈

பெற்றோருக்குப் பிள்ளைகள் மீதும், முதலாளிக்குத் தொழிலாளி மீதும், அதிகாரிக்குச் சிப்பந்தி மீதும், பாங்க்குக் கடன் பெற்றவர் மீதும் அதிகாரம், உரிமையுண்டு. அவற்றை எல்லா இடங்களிலும் எல்லா அளவுகளிலும் செலுத்த முடியாது. செலுத்த முயலாமலிருப் பவர் குறைவு. செலுத்துபவருக்கு எதிர்காலத் தோல்வி நிச்சயம்.

ஹாஸ்டலுக்குப் போகும் பையனைப் படிக்கச் சொல்லி புத்திமதி சொல்லலாம். தினமும் 3மணி படிக்க வற்புறுத்தலாம். எப்படி அதை நிறைவேற்ற முடியும்? நிறைவேற்ற முடியாத ஓர் உரிமையை அளவு கடந்து வற்புறுத்தினால் பையன் பொய் சொல்ல ஆரம்பிப்பான். அதனால் பிள்ளைக்கு வெறுப்பு வரும். தகப்பனாருக்கு எதுவும் புரியவில்லை என்பது, அவனுக்குப் புரிந்து விடும்.

சர்க்கார் தொழில் அதிபர்களை உண்மையான கணக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லலாம். வற்புறுத்தினால் எப்படி அதை நிறைவேற்றுவது? நடைமுறையில் கோடிக்கணக்காக இலாபம் சம்பாதித்து ஆயிரக்கணக்காக வரி கட்டுபவர் தப்பித்துக் கொள்வார் கள். இலட்சக்கணக்கில் வியாபாரம் செய்து ஆயிரக்கணக்காகச் சம்பாதிப்பவன் வருமானவரி ஆபீஸுக்கு ஆயிரம் நடை நடக்க வேண்டியிருக்கும்

இலங்கை அகதிகளை வேலைக்கு வைத்துக் கொண்டால் தலைக்கு இவ்வளவு எனக் கடன் கொடுப்பதாக ஒரு பாங்க் திட்டம் கொண்டு வந்தது. திட்டத்தின் நிபந்தனைகளில் ஒன்று, கடனைத் திருப்பிக் கொடுத்த பின்னும் அகதிகளை நிரந்தரமாக வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்பது. கடனைத் திருப்பிக் கொடுத்த



பின் பாங்க் எப்படி இந்த நிபந்தனையை அமுல் செய்யும்? ஏன் இல்லாத அதிகாரத்தைச் செலுத்த முயல்கிறார்கள்? நடந்தது என்ன? இந்தப் பாங்கில் கடன் வாங்கியவர்களில் பெரும்பாலானோர் அகதிகளைக் கொஞ்ச நாளைக்குத்தான் வேலையில் வைத்திருந் தார்கள். அகதிகளே ஓடி விடுவது வழக்கம். தொழில் அதிபர்கள் பணம் வந்தவுடன் அகதிகளைத் துரத்தி விடுவதும் வழக்கம்.

***இல்லாத அதிகாரத்தைச் செலுத்த முயன்றால் இருக்கும் வசதியும் போய்விடும்.***

**இந்த ஒரு குணத்தை அழிப்பது திறமையானவர் உயர்ந்த அளவுக்கு நம்மை உயர்த்தும். குமாஸ்தா ஆபீசராகலாம், குத்தகைக்காரன் நிலம் சொந்தமாக வாங்கலாம்.**

❈ ❈ ❈

எந்தக் குறையை அகற்றினாலும் முன் வரலாம். ஆனால் இந்தக் குணத்தை அழித்தால் அதிகமாக முன்னுக்கு வரலாம். ஏனெனில் இது ஒரு வக்கிரமான குணம். முழு வக்கிரம் இல்லை என்றாலும் வக்கிரம் (**perversity**) கலந்தது. வக்கிரபுத்தி சராசரிக்குக் கீழுள்ளது. நமக்கு எத்தனைத் திறமையிருந்தாலும் இதுபோன்ற ஒரு குறையிருந்தால் நாம் அதிகபட்சம் சாதிப்பதை இக்குறை நிர்ணயிக்கும். அதாவது இக்குறை மட்டுமிருந்தால் என்ன சாதிக்க முடியுமோ அதையே சாதிக்கலாம். இதை அழித்தால், மற்ற எல்லாத் திறமைகளுக்கும் உயிர் வந்து விடும். நம் பொதுவான நிலையுயரும்.

**ஒரு பிரச்சினை வரும் பொழுது அதற்குரிய தீர்வு நமக்கு ஏற்கனவே தெரியுமா என யோசிக்க வேண்டும். தீர்வு ஏற்கனவே தெரிந்திருக்கும்.**

❈ ❈ ❈

பாங்குகளில் புதிய திட்டம் ஒன்று வந்தது. இது இந்தியாவுக்குப் பெரும்பலன் தரும் என நினைத்தோம். இதன் விவரம் அறிய பழைய நிதிமந்திரியைக் கலந்தாலோசித்தோம். ரிஸர்வ் பாங்க் கவர்னரைக் கேட்டால் எல்லா விவரங்களும் தெரியுமல்லவா? ஏன் அவரை நேரில் போய்க் கேட்கக்கூடாது என்றார் நண்பர். **Banking** பாங்க் நடைமுறைப் பாடப் புத்தகங்களில் இது இருக்கலாம். அமெரிக்க பாங்க்கிங் பேராசிரி யரைக் கேட்கலாம், அவர்கள் தெளிவாகச் சொல்வார்கள் என்றார். அந்தப் புத்தகங்கள் சென்னை லைப்பிரரியில் இருக்கும் என்று தோன்றியது. இவை புதிய திட்டமானாலும் பாங்க்குகள் இவற்றை 50 ஆண்டாக அறியும். இப்பொழுதே நடைமுறைக்கு எடுத்துக்கொண்டன என்பதால் கடந்த 50 ஆண்டுகளில் வெளிவந்த எந்த பாங்கிங் புத்த கத்திலும் இது இருக்கலாம் என ஒருவர் சொன்னார். அப்படியானால் என்ஸைக்குளோப்பீடியாவில் பார்க்கலாம் என்று வேறொருவர் சொன்னார். பார்த்தபொழுது விவரங்கள் அனைத்தும் விளக்கமாகப் பக்கம் பக்கமாக எழுதியிருந்தது. என்ஸைக்குளோபீடியா என் எதிரில் உள்ளது. என் பக்கத்தில் உள்ள புத்தகத்திலிருப்பதை அறிய முடியாமல் மனம் நாடெங்கும் சஞ்சாரம் செய்கிறது.

எந்தப் பிரச்சினை வந்தாலும் பெரும்பாலும் நமக்கு முக்கால் பங்கு தீர்வு தெரிந்திருக்கும் வாய்ப்புண்டு. யோசனை செய்தால் பலன் தரும்.

வந்த விஷயம் பிரச்சினையானது, அதற்குத் தீர்வில்லை என்பதாலில்லை. அவ்விஷயத்தை நாம் கூர்ந்து கவனிக்காததால் அது பிரச்சினையாயிற்று என்று பொருள். அது போன்ற பல பிரச்சினைகளிருப்பதால் நமக்கே தீர்வு தெரிந்திருக்கும் வாய்ப்புண்டு.

**முதலாளி, ஸ்தாபனம், சந்தர்ப்பம் நமக்கு அளவு கடந்த சுதந்திரம் கொடுப்பதுண்டு. அதை நம் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். அட்டூழியம் செய்யக்கூடாது.**

❋ ❋ ❋

ரூ. 100க்கு சில்லரை கேட்டால் 101ரூபாய் கொடுக்கும் சந்தர்ப்பம் உலகில் இல்லை. இதை விளக்கும் வகையில் உள்ள பழமொழி



‘வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்’. 25 நிமிஷத்தில் வேகும் அரிசியை 24 நிமிஷத்தில் எடுத்துவிட்டால் அது அரிசியாக இருக்கும். 26நிமிஷத்தில் எடுத்தால் சாதம் களிபோலிருக்கும். நாலு பேர் பேசும்பொழுது ஒருவருக்குக் கிடைக்கும் மரியாதை இதேபோல் அவர் கொடுக்கும் மரியாதையால் துல்லியமாக நிர்ணயிக்கப்படுகிறது. சற்று அதிகமாகவோ குறை வாகவோ இருக்கும் அமைப்பு வாழ்வில் இல்லை. வாளால் மரத்தை அறுப்பவன் 3மணி நேரம் வேலை செய்த பின் மரம் முடிவாக அறுபட ஒரு நிமிஷம் இருக்கும்பொழுது நிறுத்தினால் அவன் மீண்டும் வந்து அந்த ஒரு நிமிஷ வேலையைப் பூர்த்தி செய்தால்தான் மரம் பிளவு படும். வாழ்க்கை அமைப்பு மயிரிழையும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

எந்த ஸ்தாபனத்திலும் சுதந்திரம் கொடுப்பது அதாவது இடம் கொடுப்பது என்பதில்லை. 5மணிக்கு ஆபீஸ் முடிந்தால் 3நிமிஷம் முன்னதாக வெளியே போக முடியாது. சுதந்திரம் ஒருவருக்குக் கிடைக்கிறது எனில் அதை அன்னை ‘அருள்’ என்கிறார். ஒவ்வொரு வேளையும் சொந்த வீட்டில் சாப்பாட்டைக் கேட்டுச் சாப்பிட வேண்டிய வருண்டு. யாசகமாகப் பெறுவதுபோல் பெறும் வீடுண்டு. அன்பாகத் தேடி அளிப்பதுண்டு. வீட்டிலிருப்பவருக்கு உணவு, தின்பண்டம், இனிப்பு, பக்ஷணம் கொடுப்பதை ஓர் இனிமையான கடமையாக ஏற்றுக் கொண்டு யாருக்கு எது பிடிக்கும், எப்பொழுது எது தேவை எனக் கவனித்து, கேட்காமல் அளிக்கும் குடும்பம் உண்டு, குடும்பத்தில் இதுபோன்ற கவனிப்பும், அதனால் ஏற்படும் சுதந்திரமும் பார்க்கலாம்.

வேலை செய்யுமிடத்தில் இதே சுதந்திரத்தைக் காண்பதரிது. அது அமைவது அருள். அருளைத் தன் ஆன்மாவின் முன்னேற்றத் திற்குப் பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கை முன் னேற்றத்திற்கு உபயோகப்படுத்த வேண்டும். தான் நலம் பெறப் பயன் படுத்துவது சரி. இது ஆயிரத்தில் ஒருவருக்குண்டு. இதை அனுப வித்தவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். நல்ல முறையில் பயன் படுத்தியவர்களை நான் கண்டதில்லை. அட்டூழியம் செய்தவர்களையே கண்டேன். இப்படிப்பட்டவர்கள் சிலர் செய்தவை:

* அன்னையின் காலடியிலிருந்துகொண்டே பகிரங்கமாகத் தொழில் செய்து சொந்தமாகச் சம்பாதித்தார் ஒருவர்.
* 15 வருஷம் பகலும், இரவும் படுக்கையில் வாழ்க்கையை சோம்பேறியாகக் கழித்தார் ஒருவர்.
* வீட்டு வேலைக்காரி 20 நாள் மாதத்தில் வருவதில்லை.
* முதலாளிக்குத் துரோகம் செய்தவரொருவர்.
* வேலை செய்யுமிடத்தைவிட்டு காலை 6மணிக்குப் போய் இரவு 8½ மணிக்கு வருவதே அன்றாடக் கடமையாகக் கொண்டவர் ஒருவர்.
* முதலாளிக்கு எந்த எந்த வகையில் நஷ்டம் ஏற்படுத்தலாம் என்று யோசனையை மேற் கொண்டு நிறைவேற்றியவர் ஒருவர்.
* காரிலேயே ஏறாதவர், சந்தர்ப்பம் வந்தவுடன் தினமும் 6மணி காரில் கழித்தார்.
* பிரம்மச்சரியத்தை மேற் கொண்டவர் பெண்களை நாடினார்.
* குருவுக்கு மிஞ்சிய சிஷ்யரானார்.
* தம்மை உயர்த்தியவர் தமக்கு அடங்கவேண்டும் எனக் கருதினார்.
* முதலாளியிடம் தினம் ஒரு மணி உபதேசம் செய்தார்.
* தினசரி 50 பொய்களைச் சுதந்திரமாகப் பேசினார்.

அன்னை இந்தச் சுதந்திரத்தை அனைவருக்கும் அவரறியாமல் அளிக்கிறார். அதை அறிந்து அதை நம் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்த வேண்டியது நம் கடமை

தொடரும்.

❋ ❋ ❋

**ஜீவிய மணி**

தூய்மையான மனம், தூய்மையான ஆன்மா மூலம் இறைவனை அடையும்.



# இம்மாதச் செய்தி

**காணிக்கையை நினைத்து பிறகு அதைச் செலுத்தும் முன் காணிக்கையின் அளவு இருமடங்கு, மும்மடங்காகத் தானே பெருகுவதுண்டு. தன்னையே காணிக்கையாகக் கொடுத்த ஜீவனின் அனுபவம் அது.**

**ஜீவன் பரம்பொருளின் பகுதி. தன்னை முழுமையாகக் கொடுத்த பின் ஜீவன் நகர்ந்தால் பரம்பொருள் செயல்படுகிறது. அது இறைவன் செயல். இடையறாத இறைவனின் செயலை ஜீவனில் உணர்த்தும் செயல் தன்னையே காணிக்கையாகக் கருதுதல்.**

**"உவந்தளித்தால் உன்னையே அளிப்பாய். என்னை உவந்து ஏற்றுக் கொண்டால் உன்னை முழுவதும் நான் பெறும்வரை என் ஜீவன் உன் பாதமலருக்குக் காணிக்கையாகும்".**

**தன்னையே காணிக்கையாக்குமுன் தன்னை இறைவனாக அறிய வேண்டும்.**

❋ ❋ ❋

## லைப் டிவைன்

கர்மயோகி

# VIII. The Methods of Vedantic Knowledge

*Page No: 63*
*Para No: 7*

We have five senses.
There is a sense-mind.
This mind can develop further senses.
It is its own sovereign action.
Our hands can learn the weight of things.
It can be very accurate.
Sense-mind can teach it.
No other physical means is necessary.
Sense-mind has that capacity.
It uses the sense of contact as a starting point.
It learns of the pressure also.
But it is not the touch that teaches the mind.
Mind finds out the right weight.
It does so by its own independent perception.
Touch is used to know the object.
That is how pure reason acts.
Sense-mind also acts like reason.
It does the same thing with sense-experience.



## 8. வேதாந்த ஞானம்

நமக்கு ஐம்புலனுண்டு.
புலன்கட்கு அறிவுண்டு.
இவ்வறிவு புதிய புலன்களை உற்பத்திச் செய்யவல்லது.
மனத்தின் அடிப்படை உரிமை அது.
பொருள்களின் எடையை கை அறிய உதவும்.
எடை துல்லியமாக இருக்கும்.
புலனறிவால் அதைக் காண முடியும்.
வேறு உதவி தேவையில்லை.
புலனறிவுக்கு அத்திறனுண்டு.
தொடு உணர்ச்சியே ஆரம்பம்.
கனத்தையும் ஆரம்பமாகக் கருதுகிறது.
மனம் தொடு உணர்வால் அறியவில்லை.
மனம் சரியான எடையை தானே அறிகிறது.
தனக்கேயுரிய திறமை மூலம் மனம் அறிகிறது.
பொருளை அறிய தொடு உணர்ச்சி பயன்படுகிறது.
பகுத்தறிவு இவ்விதம் செயல்படுகிறது.
புலனறிவும் இப்படியே புரிந்து கொள்கிறது.
புலனறிவு தொடு உணர்ச்சியைப் பயன்படுத்துகிறது.

It is used as a mere first starting point.
From there it proceeds to a knowledge.
That knowledge has nothing to do with sense-experience.
It has nothing to do with sense-organs too.
It may even contradict their evidence.
The extension of faculty is now a fact.
It is not only to outsides.
Not only in small things this is true.
Manas can thus be extended to others.
It is true senses relate to objects.
Then, this extension becomes a possibility.
It can be extended to others' thoughts.
Feelings too can thus be known.
Their utterance is not needed.
No aid by their gesture is called for.
No action or facial expression is necessary.
These are partial evidence.
They are misleading data.
Sometimes they contradict the fact.
We can utilise the senses inside.
We can recognise the sense experience.
Appearances and images will be enough.
They do not belong to our environment.
Nor do they belong to our organisation.
All these are extensions of our faculties.



அதை ஆரம்பமாக்குகிறது.
அதிலிருந்து ஞானம் பெற முயல்கிறது.
பெற்ற ஞானத்திற்கும் புலனுணர்விற்கும் தொடர்பில்லை.
புலன்களுடன் தொடர்பேயில்லை.
மனம் அறிவதும் புலன் உணர்வதும் எதிராகவுமிருக்கலாம்.
திறமையை நீட்ட முடியும் என்பது உண்மை.
புறப்பொருள்கட்கு மட்டும் அன்று அவ்வுண்மை.
இது சிறிய விஷயங்களில் மட்டும் உண்மையன்று.
மனத்தை, இதேபோல் மற்றவற்றிற்கும் நீட்டலாம்.
புலன்கள் பொருள்களைத் தீண்டுவது உண்மை.
ஆகவே, இதுபோல் நீட்டுவதும் முடியும்.
பிறர் எண்ணங்களையும் இதுபோல் அறியலாம்.
உணர்ச்சியையும் இதுபோல் அறியலாம்.
அவற்றை வெளியிட வேண்டும் என்ற அவசியமில்லை.
அங்க அசைவுகளும் தேவையில்லை.
முகக்குறியோ, செயலோ தேவையில்லை.
அவை முழுமையுடையவையில்லை.
தவற்றுக்கு அடிகோலுபவை அவை.
சில சமயங்களில் அவை உண்மைக்கு எதிராகவுமிருக்கும்.
நம்முள் உள்ள புலன்களை நாம் பயன்படுத்தலாம்.
புலனுணர்வை நாம் கண்டறியலாம்.
தோற்றங்களும், உருவமும் போதும்.
அவை நம்மைச் சூழ்ந்தவையல்ல.
நமக்கு அவை தேவையுமில்லை.
இவை நம் திறமைகளின் வெளிப்பாடுகள்.

We hesitate to receive them.
We are incredulous.
It is abnormal to the physical mind.
It belies our ordinary life.
It goes against our daily experience.
They are difficult to set in motion.
We cannot easily systematize them.
They cannot become an orderly instrument.
Nor are they a serviceable set.
Still, we must admit a higher truth.
These enlarge our active field.
It is a superficial field.
Of course, the effort is ill-ordered.
It is by a casual, untaught effort we try.
Maybe it can be a scientific effort.
It may even be a well regulated practice.

*Page No : 64*

*Para No : 8*

We have an aim in view.
None of them leads to our aim.
These truths have psychological experiences.
They are beyond the perception of sense.
But, they are seizable by the perception of reason.
They give us only a larger field.
They offer more effective means for observation.



நாம் தயங்குகிறோம்.
நமக்கு நம்பிக்கை எழவில்லை.
ஜட மனத்திற்கு இவை புறம்பானவை.
நம் அன்றாட வாழ்வை இவை பொய்யாக்குகின்றன.
தினசரி வாழ்வுக்கு எதிராக இருக்கின்றன.
இவற்றைச் செயல்படுத்துவது கடினம்.
இவற்றை முறைப்படுத்துவதும் முடியாத ஒன்று.
ஒழுங்கான கருவியுமாக இதனால் முடியாது.
பயன்தரும் முறையில் அவற்றால் செயல்படமுடியாது.
இருப்பினும் ஓர் உயர்ந்த உண்மையை நாம் ஏற்க வேண்டும்.
நம் செயலை அவற்றால் விரிவுபடுத்த முடியும்.
இது மேலெழுந்தவாரியான அரங்கம்.
நம் முயற்சி முறையானதன்று.
விவரமில்லாமல், தான்தோன்றியாக நாம் முயல்கிறோம்.
இதை விஞ்ஞானரீதியாக மாற்ற முடியும்.
சிறந்த முறையாகவும், இதை மாற்றலாம்.

நமக்கோர் இலட்சியம் உண்டு.
இவை எதுவும் நமக்கு உதவா.
இவற்றிற்கு மனோதத்துவ உண்மையுண்டு.
அவை புலனைக் கடந்தவை.
ஆனால், அவை பகுத்தறிவுக்குப் புலப்படும்.
நம் பார்வையை அதனால் விரிவுபடுத்த முடியும்.
சூழலை அறிய அவை பெருங்கருவிகளாகும்.

There is the truth of things.
They always escape beyond the senses.
Universal life has a rule.
It is a sound one.
It is in its very constitution.
There may be truths attainable by reason.
If so, man can attain it.
Because, in man the capacity to know will be there.
He can arrive at it.
He can verify them.
He can do so by experience.
It is a knowledge by identity.
This is in our mentality.
By extension, we can be aware of it.
Thus we are aware of our own existence.
It is really a self-awareness.
It is more or less conscient.
It is present to our conception.
Our self has its own contents.
Our knowledge is based on that conception.
We can say it differently.
It will be a general formula.
We seek knowledge of the contents.
We seek knowledge of the continent.
One is in the other.



சத்தியம், உண்மை என்பவை பொருள்கட்குண்டு.
அவை புலன்கட்குப் புலப்படா.
உலகத்தில் ஒரு சட்டம் உண்டு.
அது ஒரு போதும் தவறாது.
உலகத்தின் பிறப்பிலேயே ஏற்பட்டது அச்சட்டம்.
அறிவுக்கு எட்டிய உண்மைகள் உலகில் உண்டு.
அப்படியானால், அது மனிதனுக்குண்டு.
அவற்றையறியும் திறன் மனிதனுக்குண்டு.
மனிதன் அவற்றைப் பெறலாம்.
சரியா எனச் சோதிக்கலாம்.
அனுபவத்திலவற்றை அறியலாம்.
அது ஐக்கியத்தால் பெறும் ஞானம்.
நம் மனத்தின் திறன் அது.
அதைப் பெற நாம் முயலலாம்.
நம்மை நாம் அறிவதே அப்படித்தான்.
அது தன்னையறிதலாகும்.
நாம் அறிந்து செய்யும் செயலாகும்.
நம் அறிவுக்கு எட்டும் ஞானமிது.
நம் ஆத்மாவுக்கு விஷயமுண்டு.
அத்தத்துவமே நம் ஞானம்.
வேறுவகையாகவும் அதைக் கூறலாம்.
அது பொது விதி.
நாம் விஷய ஞானத்தைத் தேடுகிறோம்.
நாம் உள்ளுறை இரகஸ்யத்தை நாடுகிறோம்.
ஒன்று மற்றதிலுள்ளது.

There is Self beyond us.
Self is outside us also.
It is Atman.
It is Brahman of the Upanishads.
Our mental self-awareness is in us.
It can be extended to Self.
This is a possibility.
Indian Vedanta bases itself on this.
Vedanta has knowledge of the Self.
The Self of the universe can be known through it.

Contd...

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சர்வ ஆரம்பப் பரித்தியாகி எனில் எவ்வளவு சிறியதானாலும் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது. **(e.g)** ஓர் அபிப்பிராயத்தைச் சொல்வது, அல்லது நோக்கத்தை வெளியிடுவது, சௌகரியத்திற்காக ஒரு பழக்கப்பட்ட காரியத்தைச் செய்வதும் அது போலாகும். அடக்கமுடியாத ஆசையை அடக்க முயல்வது ஆரம்பமாகும்.



நம்மைக் கடந்த ஆத்மா உண்டு.
நமக்கு வெளியேயும் ஆத்மா உண்டு.
அதை ஆத்மா என்போம்.
உபநிஷதம் அதை பிரம்மம் என்கிறது.
மனம் தன்னை அறிவது அதுபோலாகும்.
அதை ஆத்மாவுக்கும் தர முடியும்.
அது முடியும்.
வேதாந்தத்தின் அடிப்படை இது.
வேதாந்தம் ஆத்மாவை அறியும்.
அதன் மூலம் உலகை அறியலாம்.

தொடரும்...

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அறியாமையே ஞானம். அது மாறும் நேரம் நாம் காண்பது ஞானோதயமாகும். பொதுவாக நம் குணத்தின் அன்றாட வெளிப்பாட்டில் அந்நேரம் இருக்கும். அது தலைகீழேயும் காணப்படும்.

"சிறு குறிப்புகள்''

# 'இந்தியாவில் 2½ மனிதர்கள் இருக்கிறார்கள்'

- மன்மோகன் கோஷ்

ஸ்ரீ அரவிந்தருடைய தம்பி பரீன் கோஷ் அலிப்பூர் வெடி குண்டு கேஸில் முதல் எதிரி. அவர் தாம் செய்த எதையும் ஒளிக்கவில்லை. பெருமிதத்துடன் தாம் வெடிகுண்டு செய்த விவரங்களைக் கோர்ட்டில் வெளியிட்டார். அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. முகமலர்ச்சியுடன் பெற்றுக் கொண்டார். பின்னர் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. சிறைவாசம் முடிந்து விடுதலையாகி 1959இல் காலமானார். மன்மோகன் ஸ்ரீ அரவிந்தருடைய அண்ணன். 1904இல் ஸ்ரீ அரவிந்தர் அரசியலில் நுழைந்தார். 1910இல் புதுவை வந்தார்.

சிறையிலிருந்து விடுதலையானபின் மேடையில் பேசும்பொழுது, "நான் சிறைக்குச் செல்லுமுன் நாடு துடிப்புடன் இருந்தது. எங்கும் விடுதலை வேட்கையைக் கண்டேன். இன்று திலகர் ரங்கூன் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளார். நாடு இருளில் அமிழ்ந்துள்ளது. சாவின் அமைதியை எங்கும் காண்கிறேன். எங்கே போயிற்று நான் கண்ட விழிப்பு?" என்று ஸ்ரீ அரவிந்தர் கதறினார்.

இறைவன் திட்டம் வேறு, சூட்சும உலகில் இந்தியச் சுதந்திரம் நிறைவேறிவிட்டது என்பதால் இறைவன் ஸ்ரீ அரவிந்தர் யோகத்தை மேற்கொள்ளும்படியும், அதற்காகப் புதுவை செல்லும்படியும் பணித்தார் உள்ளிருந்து எழுந்த அசரீரீ சொல்லியதெல்லாம் "புதுவைக்குப்போ..." என்பதே. என்றும் அக்குரலுக்குப் பணிந்தார் ஸ்ரீ அரவிந்தர். அன்றே ஏற்றுக் கொண்டார்.

பரீனும், மன்மோகனும் நாட்டு விடுதலையைப் பற்றிப் பேசினர். விடுதலை என்பது ஓர் இயக்கம். இயக்கத்திற்குத் தலைவர்கள் தேவை. தொண்டர்களும், ஊழியர்களும் ஏராளமாகத் தேவை. ஆதரவாளர் கள் ஆயிரக்கணக்கில் தேவை. இவர்கள் எல்லாம் வீரர்களாகவும்,



தியாக மூர்த்திகளாகவும், இலட்சியப் புருஷர்களாகவும் இருந்தால் விடுதலை நிறைவேறும்.

1995இல் ஒரிசா மாநிலத்தில் தொழில்களைஆரம்பிக்க முயன்ற முதன் மந்திரி தொழிலை ஏற்க தம் மாநிலத்திலிருந்து எவரும் முன் வரவில்லை எனக் கண்டபொழுது அவரிடம் அருகிலிருந்தவர், "நம் மாநிலத்தில் 5லட்சம் ரூபாயுள்ளவர்கள் எவரும் இல்லை'' என்றார். கூட்டத்திற்கு ஆயிரம் பேர் வந்தாலும் பணமுள்ளவரே தொழிலை ஆரம்பிக்கலாம். 5லட்சத்தில் தொழிலுக்கு மனை வாங்க முடியாது. தொழில் எப்படி ஆரம்பிப்பது?

1904இல் இந்தியர் புழுக்களாக இருந்தனர். எதைக் கண்டாலும் பயம், எவரைக் கண்டாலும் பயம். மூட நம்பிக்கை. போலீஸ் என்ற சொல் ஆரவாரமான கூட்டத்தை அமைதியாக்கும். மனிதனாக வாழ்பவனைக் காண்பது சிரமம். இலட்சியப்புருஷனை எங்குத் தேடுவது? இந்நிலையை சித்தரிக்கும் வகையில் ஸ்ரீஅரவிந்தர் தமையன் மன்மோகன் கோஷ்,

**''இந்தியாவில் மனிதர்கள் இல்லை. 2½ பேர் இருக்கின்றார்கள்'' என்றார். அவர் கூறிய அந்த 2½ பேரில் முதல்வர் ஸ்ரீ அரவிந்தர், அடுத்தவர் பரீன் கோஷ், அவருடைய தம்பி, அடுத்த ½ மனிதன் பாலகங்காதர திலகர்.**

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பெருமையை நாடும் வீறாப்பும், புண்படும் அன்புள்ளமும் ஒரே நாணயத்தின் இரு புறங்களாகும். ஒன்றை அழித்தால், அடுத்ததும் மறையும்.

**"அன்பர் கடிதம்''**

## இனிய அன்னைக்கு,

நான் இப்பொழுது “அன்னையின் தரிசனம்” புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். இதன் மூலம் என் நம்பிக்கை (அன்னையின் மேல்) மேன்மேலும் அதிகரிப்பதை உணர்கிறேன்.

2 நாட்களுக்கு முன் அன்னை என் ஒரே மகளைக் காப்பாற்றிய அருளை இக்கடிதத்தின் மூலம் என் நன்றியுடன் தெரியப்படுத்த விரும்பு கிறேன். 12 ஆம் வகுப்பு படிக்கும் அவள் **college**இல் **exam** எழுதுவதற்காகச் சென்றிருந்தாள். **Around 4pm exam** முடிந்துவிட்டது. நியாயமாகப் பார்த்தால் 4.45 **to** 5 வீடு வந்துவிட வேண்டும். 5மணி அளவில் என் மனத்தில் ஏதோ **restlessness** இருந்தது. மகளுக்கு ஏதோ **accident** ஆகப் போகிறது என்பது போன்றதோர் உணர்வு ஏற்பட்டது. உடனே நான் அன்னையிடம் மனத்தைச் செலுத்தி நாமஸ்மரண் செய்ய ஆரம்பித் தேன். 5.30 மணிக்கு என் மகள் படபடப்புடன் வந்து அப்படியே அசந்து உட்கார்ந்துவிட்டாள். முகமெல்லாம் கருத்து விட்டு இருந்தது. **Nervous** ஆகி லேசாக விசும்பவும் செய்தாள். நான் தண்ணீர் கொடுத்துவிட்டு விஷயம் கேட்டதில் ஒரு **second**இல் தன் உயிர் தப்பியதாகவும் ஒரு பெண்மணி **red signal** போட்டிருந்தும் மிக வேகமாக 2 **wheeler**ஐ ஓட்டி வந்து தன்மேல் **almost** இடிக்க வந்ததாகவும், அவர் வந்த **speed**இல் தன் மேல் பட்டிருந்தால் தனக்கு என்ன ஆகியிருக்கும் என்பதே தெரியவில்லை என்பதையும் சொன்னாள். நான் உடனே அன்னைக்கு ஆயிரம் கோடி நன்றி கூறினேன். முக்கியமாக **I want to write about the tremendous change in me after praying to Mother which is, I don't get nervous or perturbed by anything. A sort of calmness remains in my mind. A lot of peace prevails in my heart.** இதே போன்றதொரு நிகழ்ச்சி 2 வருடங்களுக்கு முன் நடந்திருந்தால் (அன்னையை அறியாத தருணம்) நான் அழுது புரண்டு வேண்டாதனவெல்லாம் **imagine** செய்து கொண்டு **nervous** ஆகி அந்த **state**இல் இருந்து **recover** ஆக 1 **week** ஆகியிருக்கும். ஆனால் இன்று அன்னையின் அருளால் தெளிவுடன் அவருக்கு நன்றி செலுத்தும் நிலையில் என்னைப் **பதப்படுத்திவிட்டார்** அன்னை.

❋ ❋ ❋





### The darkness failed and slipped like a falling cloak
### From a reclining body of a god

**இருள் தோல்வியுற்றது, தெய்வத்தின் உடலிலிருந்து நழுவிவிழும் ஆடைபோல் இருளின் திரை உலகினின்று விலகுகிறது**

வேதத்தில் உஷைக் காலம் என்பதை இப்பகுதி விவரிக்கிறது. இறைவன் இருளாக மாறியபின் இருளால் புதைந்துள்ள ஒளி வெளிவர முயல்வதையும், அம்முயற்சியின் ஆனந்தத்தையும் அனுபவிப்பதற்காகவே இறைவன் சிருஷ்டித்தான் என்பது ஸ்ரீஅரவிந்தரின் லீலை என்ற தத்துவம்.

**Child is the father of the man** என்பது ஆங்கிலச் செய்யுளின் ஒரு வரி. தாயார் குழந்தை கற்பதைப் பொன்போலப் போற்றுகிறார். தகப்பனார் குழந்தையின் மழலையை ரசிக்கிறார். குழந்தை பேசுவது அனைத்தும் நாம் குழந்தைக்குக் கற்றுக் கொடுத்ததாகும்.

* குழந்தை என்பது நம்முடைய சிறு உருவம்.
* நாமறிந்த அனைத்தையும் குழந்தைக்குக் கற்பிக்க முயல்கிறோம்.
* ஓரளவு குழந்தை கற்றாலும் நாம் சந்தோஷப்படுகிறோம், பெருமிதப்படுகிறோம்.
* குழந்தையின் கல்வி முடியும் நிலையில் நம்மை விட அதிகமாகக் குழந்தை அறிகிறது.
* நம்முடைய அறிவைக் குழந்தையினுள் ஒளித்து வைத்துள்ளோம். அது வெளிப்படுவதைக் காணும் ஆனந்தம் பேரின்பம்.
* அதைப்போல் இறைவன் தன்னை நம்முள் ஒளித்துவைத்து, அதைக் கட்டாயமாக வெளிப்படுத்தும் திறனை இழந்து தானே மனிதனினின்று தெய்வம் வெளிப்படுவதை (பரிணாமம்) கண்டு

ஆனந்தப்படுகிறான்.

* மனிதன் தன் குழந்தையிடம் பெறும் இன்பத்தை இறைவன் மனிதனிடம் காண்கிறான்.
* "சாவித்திரி" காவியம் அந்த உஷைக்(விடியல்) காலத்தில் ஆரம்பிக்கிறது.
* இருள் திரை விலகுவதுபோல் விலகும் நிகழ்ச்சியை மேற் சொன்ன வரிகள் குறிக்கின்றன.

இந்தப் பக்கத்தில் இறைவனின் ஸ்பரிசம் எதையும் சாதிக்கும், மறைபொருளின் பொலிவின் பெருமை, வழி தவறிய அற்புதம் இடமின்றி தவிப்பது, காலத்தின் நெஞ்சில் கனியும் நினைவு போன்ற கருத்துகள் உள்ளன.

மகாபாரதச் சாவித்திரி எமனிடமிருந்து சத்தியவானை மீட்டாள். ஸ்ரீஅரவிந்தரின் சாவித்திரி எமனை இருளிலிருந்து ஒளியாக மாற்றி, உலகில் மரணத்தை அழித்தாள்.

சாவித்திரியின் எந்தப் பகுதியும் இந்த மையக் கருத்துடன் தொடர்புள்ளது. சாவித்திரி எந்த ஆன்மீக முயற்சியை - தவம் - எமனிடம் மேற்கொண்டாளோ, அதே போன்ற முயற்சியை மனிதன் வாழ்வில் மேற்கொண்டால், எமனை, சாவித்திரி ஒளிமயமாக்கியது போல் அன்பன் வாழ்வை அதிர்ஷ்டமயமாக்க முடியும்.

**இறைவனின் ஸ்பரிசம் எதையும் சாதிக்கும்.**

என்ற வரி இக்கருத்தைக் கூறுகிறது. இறைவனின் ஸ்பரிசத்தைப் பெறுவதெப்படி? மனிதன் அடுத்த மனிதனில் இறைவனைக் காண்பது இறை தரிசனத்தைவிடப் பெரியது. மனித உறவில் நாம் அடுத்தவரை - இறைவனை - இதமாகவும், இனிமையாகவும் தீண்டினால் இறைவனுடைய ஸ்பரிசத்தை நம் இதயம் பெறும்.

**நல்லெண்ணத்தால் மட்டும் நிரம்பிய மனம் இறைவனுக்குரியதாகும்.**

❋ ❋ ❋



**Agenda Vol VI, P.75**

## Age does not matter because advantages and disadvantages balance

## வயது தடையில்லை. ஏனென்றால் வசதிகளும் குறைகளும் ஒன்றுக்கொன்று சரிக்கட்டிக் கொள்ளும்

இளமையிற் கல் என்பது வாசகம். இளமையில் கற்காவிட்டால் பின்னால் படிக்க முடியாது. படித்தால் வாராது. "ஒரெட்டில் பெறாத கல்வி" பயன்படாது என்பது பழைய வாக்கு. இளைமையில் படிக்காவிட்டால் பிறகு படிக்க வெட்கமாயிருப்பதால் படிக்கும் முயற்சியை மேற்கொள்வதில்லை "ஈரெட்டில் பெறாத மனைவியும், மூவெட்டில் பெறாத பிள்ளையும், நாலெட்டில் பெறாத செல்வமும்..." என, கல்வி, திருமணம், புத்திரன், செல்வம் பெற நம் மரபு வயதைக் குறித்துள்ளது. அன்னை இதுபோன்ற மரபுவழி வந்த ஞானத்தை ஏற்பதுடன் அவற்றையே முடிவாகக் கொள்வதில்லை. இதைக் கடந்த உண்மைகள் உள. அவை:

1. **Biological truths** உடற்கூற்றுக்குரியவை
2. **Truths of life** வாழ்வுக்குரிய சூட்சுமங்கள்
3. **Subtle Truths** சூட்சும இரகஸ்யங்கள்
4. **Spiritual Truths** ஆன்மீக உண்மைகள்

சந்தர்ப்பம் வரும்பொழுது இவற்றை அன்னை குறிப்பிடுவதுண்டு. ஆராய்ச்சியில் ஆர்வம் உள்ள அன்பர்கள் இது போன்ற தலைப்பை எடுத்து "அன்னை கூறியுள்ள உண்மைகள்" என்று அவருடைய 33 **Volumes** களிலிருந்து சேகரம் செய்தால் அது மற்ற அன்பர்கட்குப் பயன்படும். பல இடங்களில் அன்னை இதுபோல் பேசுகிறார்கள், சில இடங்களில் இவற்றில் எப்படி உண்மை வந்தது என விளக்கமாகக் கூறுகின்றார்கள்.

தாகூர் 48 வயதில் ஆங்கிலம் பயின்றார். அவர் கீதாஞ்சலியை வங்காளியில் எழுதினார். ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்தார். **Mr. Underwood** என்பவருடன் சேர்ந்து அதைச் செய்தார். அந்நூலுக்கு நோபல் பரிசு கிடைத்தது. அன்று நோபல் பரிசுடன் 1லட்சரூபாயும் அளித்தனர், இன்று அதே தொகையை 3 கோடி

ரூபாயாக மாற்றியுள்ளனர். இளம் வயதில் தெம்பு அதிகம், ஆர்வம் அதிகம். அதனால் எளிதில் படிக்க முடியும். படித்தது மனதில் நிற்கும், ஆனால் வயதான பின் அனுபவம் அதிகம், பொறுப்பும், திறமையும் அதிகம். தெம்பும் ஆர்வமும் குறைந்தால் பொறுப்பும் திறமையும் அவற்றைச் சரிக்கட்டுகின்றன என்கிறார் அன்னை.

60, 70 வயதிற்கு மேல் உடற்பயிற்சியை மேற் கொண்டு சிறப்பாக உடல்நலம் பேணுவதை இன்று மேல்நாடுகளில் செய்கிறார்கள். எந்த விளையாட்டு ஆனாலும் இளம் வயதைக் கடந்தால் ஒலிம்பிக் பரிசில்லை என்பதை உலகம் அனுபவபூர்வமாக அறிந்து ஏற்றுக் கொண்டபின் சமீபத்தில் ஒருவர் தாம் முதல் ஒலிம்பிக் பரிசினால் அலங்கரிக்கப்பட்ட பிறகு 15 வருஷம் கடந்து மீண்டும் அதே பரிசைப் பெற்றார்.

கல்வி, செல்வம், விளையாட்டு, யோகம், கலை ஆகியவற்றை இளம்வயதில் பயிற்றுவிப்பது உலக வழக்கம். அது சரி. ஆனால் அதுவே சரி என்று அன்னை ஏற்கவில்லை. ஆர்வமும், முயற்சியும் ஆன்மாவைத் தொட உதவும்.

**ஆன்மா விழித்தெழுந்த பின் வாழ்வின் சட்டங்கள் நிற்கா. அன்னையைப் பொருத்தவரை அவர் கூற்றுகள் அனைத்தும் ஆன்மாவின் வழியை அடிப்படையாகக் கொண்டவை. பிறவிப் புத்திசாலித்தனம் வளரும் என்பதையும் அதுபோன்றே கூறுகிறார்கள். உபவாசம், "உண்டி சுருங்குவது பெண்டிற்கழகு'' என்ற சொல்லின் உண்மையை அன்னை மாற்றி, சுருங்கச் சாப்பிடுவது முறையன்று. எத்தனை ஆண்டானாலும் உடல் அன்றிழந்த சாப்பாட்டை மீண்டும் ஈடுகட்டும் வகையில் சாப்பிட விழையும், கண்விழித்தாலும் உடல் அதைப் பின்னர் சரி செய்யும் என உடலுக்கேயுரிய சட்டங்களைப் பற்றிக் கூறி இந்த யோகத்திற்கு முக்கியம் "balance'' நிதானம் என்பதைப் பல இடங்களிலும் வலியுறுத்துகிறார்.**

❋ ❋ ❋



*"பகவானுடைய இதர நூல்கள்"*

**Archives Apr '83**

## ஸ்ரீ அரவிந்தரை நாடு கடத்தும் எண்ணம்

அலிப்பூர் கேஸில் ஸ்ரீ அரவிந்தர் விடுதலையான பின் பிரிட்டிஷ் சர்க்கார் மேல் கோர்ட்டிற்கு அப்பீல் செய்வதா, அவரைக் கைது செய்வதா, நாடு கடத்துவதா என யோசனை செய்த தஸ்தாவேஜுகள் சுதந்திரத்திற்குப் பின் கிடைத்தன. அது சம்பந்தமான தகவல்கள், கருத்துகளில் பல,

* 9 தேசீயவாதிகளை விசாரணையின்றி வங்காளத்தைவிட்டுக் கடத்தி ஆக்ரா ஜெயிலில் வைத்தனர். அவர்களுள் ஸ்ரீ அரவிந்தரின் தாய் மாமன் கிருஷ்ணகுமார் என்பவரும் ஒருவர்.
* பிப்ரவரி 1910இல் ஸ்ரீ அரவிந்தர், கிருஷ்ணகுமார் வீட்டில் தங்கியிருந்தார்.
* அலிப்பூர் கேசில் ஆங்கிலேய ஜட்ஜ் கொடுத்த தீர்ப்பு, குறிப்பாக ஸ்ரீ அரவிந்தரை விடுதலை செய்தது பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பிடிக்கவில்லை.
* அலிப்பூர் ஜெயிலிலிருக்கும்பொழுது ஸ்ரீ அரவிந்தருடனிருந்த இளைஞர் யோகம் செய்து என்ன பலன் கண்டீர்கள் எனக் கேட்ட பொழுது பதிலாக நான் தேடியதைக் கண்டேன் என்றார் பகவான். கேஸ் என்னாகும் என மேலும் அவ்விளைஞர் கேட்டபொழுது தாம் விடுதலை செய்யப்படுவேன் என்றார்.
* மே 1909இல் விடுதலை செய்யப்பட்டார் ஸ்ரீ அரவிந்தர். ஜுலை 1909இல் பதிவு செய்யப்பட்ட ரிப்போர்ட் கூறுகிறது:-

**விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீ அரவிந்தரை வக்கீல் சங்க நூலகத்திற்கு அழைத்துச் சென்றனர். அவரைப் பெரிய மரியாதையுடன் நடத்தினர். ஒரு வக்கீல் ஸ்ரீ அரவிந்தர் காலைத் தொட்டு வணங்கினார். அங்கிருந்து C. R. தாஸ் வீட்டிற்குப் போய், மீண்டும் கிளம்பி கிருஷ்ணகுமார் வீட்டிற்குப் போய்த் தங்கினார்.**

ரிப்போர்ட் தொடர்ந்து சொல்வதாவது:-

ஸ்ரீ அரவிந்தர் ஆன்மீக நூல்களைப் படிப்பதிலும், எழுதுவதிலும் தம் நேரத்தைக் கழித்தார். யார் அவரை வந்து சந்திக்க விரும்பினாலும் அவர்களைச் சந்தித்தார்... அங்கு உலகப் பிரசித்தி பெற்ற கவி இரவீந்தரநாத தாகூர் வந்தார். வந்து ஸ்ரீ அரவிந்தருடனும், மற்றவர்களுடனும் உரையாடினார்...

இளைஞர் பலர் ஆகஸ்ட் 15, 1909 - ஸ்ரீ அரவிந்தருடைய 39ஆம் பிறந்த தினம் - அன்று கூடினர். ''வந்தே மாதரம்'' எனவும் ''ஸ்ரீ அரவிந்தர் வாழ்க'' எனவும் கோஷமிட்டனர். ''நாடு நிலையற்றுள்ளது. அது தவறு. எத்தனைத் தடைகளிருந்தாலும் நாம் உறுதியுடன் போராட வேண்டும்'' என்று ஸ்ரீ அரவிந்தர் கூறினார்.

அந்நாளில் வங்காளம் லெப்ட்டினன்ட் கவர்னரால் ஆளப்பட்டது. அவர் ''ஸ்ரீ அரவிந்தர் பயங்கரமானவர்.... அவர் ஆன்மீகத் தேசபக்தியை மக்களிடம் எழுப்புவதால் மிகவும் பயங்கரமானவர்'' என எழுதினார். அதை வங்காளச் சர்க்கார் ஏற்றது. சீப் செக்ரடரியான **F.W.** டியூக் "ஜெயிலைவிட்டு வெளியேயுள்ள பயங்கரமான எதிரிகளில் முக்கியமானவர் ஸ்ரீ அரவிந்தர்'' என்றார்.

ஓராண்டாயிற்று. பிரிட்டிஷ் சர்க்கார் மனம் மாறவில்லை. "வங்காளத்தில் முக்கியமாக இந்தியாவிலேயே சர்க்காருக்குப் பிரதம எதிரியாக இருப்பவர் ஸ்ரீ அரவிந்தர். ராஜத் துரோகமான தஸ்தாவேஜுகள் நாட்டில் பரவுவதற்கு நான் ஸ்ரீ அரவிந்தரையே முக்கியக் காரணமாகக் கூறுவேன்'' என சர்க்காரின் தலைமை அதிகாரி எட்வர்ட் பேக்கர் கூறினார். இந்தச் செய்தியை அவர் வைஸ்ராய் மிண்டோ பிரபுவுக்கு எழுதினார்.

* வைஸ்ராய் கவர்னருடைய கடிதத்தில் ஸ்ரீஅரவிந்தரை, "பயங்கரமானவர்'' எனப் பலமுறை குறிப்பிட்டதை கவனித்தார்.
* சில மாதம் கழித்து வைஸ்ராய் இலண்டனுக்கு எழுதிய கடிதத்தில் அதே சொற்களைப் பயன்படுத்தி "மிகப் பெரிய பயங்கரவாதி'' என ஸ்ரீ அரவிந்தரை விவரித்தார்.



அடுத்த மாதம் எழுதிய கடிதத்திலும் "நான் மேலும் சொல்ல எதுவுமில்லை. ஸ்ரீ அரவிந்தர் பயங்கரமானவர்'' என்றார்.

**அப்பீல், கைது, நாடு கடத்துவது**

* அப்பீலுக்குப் போனால் சர்க்காருக்குப் பழிவாங்கும் மனப்பான்மையுள்ளது என நினைப்பார்கள் என்பதால் அப்பீல் செய்வதைக் கைவிட்டனர்.
* அலிப்பூர் கேசில் விடுதலையானபின் சர்க்கார் அவருடைய எழுத்து, பேச்சை அலசிப் பார்த்து "ஸ்ரீ அரவிந்தரைக் கைது செய்யும் படியாக அவற்றுள் எதுவுமில்லை'' என சீப் செக்ரடரி கருதினார்.
* அப்பீலும் முடியாது, அரெஸ்ட் செய்யவும் முடியாது எனில் வங்காளத்தைவிட்டுக் கடத்தமுயன்றனர். அதற்குச் சட்டம் இடம் கொடுத்தது.
* லெப்ட்டினன்ட் கவர்னர் சர்க்காருக்கு எழுதுகிறார்:-

  வைஸ்ராய் அவசரமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஸ்ரீ அரவிந்தரை நாடு கடத்துவது. அவரே **ring leader** தலைவர், மிகவும் கெட்டிக்காரர், பிடிவாதக்காரர், பயித்தியக்காரரைப் போன்ற வேகமுடையவர், சேனைத்தலைவராக எவர் கண்ணிலும் படாமலிருக்கிறார்.
* விவேகாநந்தருடைய சிஷ்யை நிவேதிதா, தாய் நாட்டிலிருந்து கல்கத்தா திரும்பினார். இவர் ஸ்ரீ அரவிந்தருடன் வேலை செய்பவர். அவருடைய சர்க்கார் நண்பர்களிடமிருந்து ஸ்ரீ அரவிந்தரை நாடு கடத்தப் போவதாகக் கேள்விப்பட்டார்.

நிவேதிதா ஸ்ரீ அரவிந்தரிடம் இதுபற்றிப் பேசினார். 36 வருஷம் கழித்து இது பற்றி ஸ்ரீ அரவிந்தர் எழுதியதாவது:

**சர்க்கார் என்னை நாடு கடத்தப் போவதாகவும், நான் எனது சேவையைக் காப்பாற்ற தலைமறைவாக இருக்க வேண்டும் எனவும் நிவேதிதா கூறினார். எனது கருத்து வேறு. இது அவசியம் என நான் கருதவில்லை. 'கர்மயோகி' பத்திரிகையில் நான் இதுபற்றி எழுதினால்**

**சர்க்கார் என்னை நாடுகடத்த முடியாது என நினைத்தேன். அதேபோல் எழுதினேன். பிறகு சர்க்கார் தம் போக்கை மாற்றிக் கொண்டனர்.**

"கர்மயோகிக்" கட்டுரையிலிருந்து சில கருத்துகள்:

1. எங்கள் இலட்சியம் சுயராஜ்யம்.
2. எந்த நாடும் தன்னைத் தானே ஆளவேண்டும்.
3. உயர்ந்த பண்புள்ளவர் ஆங்கிலேயர் என்பதை மறுக்கிறோம்.
4. நம் மரபைத் தடுக்கும் ஆட்சியை எதிர்க்கிறோம்.
5. நாம் எவருக்கும் தாழ்ந்தவரில்லை. சுயராஜ்யத்தில்தான் நாடு வளரும்.

* வங்காள சர்க்கார் 11 பேரை நாடுகடத்த இந்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்தது.
* மொத்தத்தில் 53 பேர் கடத்தப்பட வேண்டும்.
* இதில் ஸ்ரீ அரவிந்தரின் நம்பர் 48.
* சீப் செக்ரடரிக்கு மனம் மாறியது.
* பதட்ட நிலை கல்கத்தாவிலிருந்தது.
* ஏற்கனவே கைதான 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ள நேரம் என்பதால் மேலும் நாடு கடத்தும் எண்ணம் தற்சமயம் தேவையில்லை என சர்க்கார் முடிவு செய்தது.
* விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் கிருஷ்ணகுமார் மித்ரா.
* அவர் 15ஆம் தேதி பிப்ரவரி விடுதலை செய்யப்பட்டார்.
* மீண்டும் பிப்ரவரி 19ஆம் தேதி ஸ்ரீ அரவிந்தரை நாடு கடத்தும் யோசனை புதுப்பிக்கப்பட்டது.
* கிருஷ்ணகுமார் வீட்டில் அந்த நேரம் ஒரு விழா கொண்டாடப்பட்டது.
* அவருடைய நண்பர்கள் உறவினர் அனைவரும் - ஒருவர் தவிர - குழுமினர்.
* அந்த ஒருவர் ஸ்ரீ அரவிந்தர்.
* தம்மீது வாரண்ட் பிறப்பித்தனர் எனக் கேள்விப்பட்டு "அசரீரி" யை ஏற்று ஸ்ரீ அரவிந்தர் சந்திரநாகூர் சென்றார்.

❋ ❋ ❋





**These are finer ranges behind the gross body as there are behind the subliminal, the subconscient behind mind**

**மனத்திற்குப் பின்னால் அடிமனமும் ஆழ்மனமும் இருப்பதைப்போல் உடலுக்குப் பின்னாலும் பல நுண்ணிய நிலைகள் உள்ளன**

பொதுவாக நாம் அறியும் சில நிகழ்ச்சிகள்:-

1. நாம் ஒருவரை நினைத்தால் அவரிடமிருந்து செய்திவருவது,
2. மாட்டின் முதுகில் உள்ள புண்ணை நோக்கி வரும் பூச்சியை வாலால் மாடு விரட்டுவது,
3. எதிர்காலத்தில் - ஓரிரு நாளில் - வரப் போகும் செய்திகள் நமக்குச் சூசகமாகத் தெரிவது,
4. உறவினர் உடல்நிலை மோசமானால் அதைச் சுட்டிக் காட்டும் நிகழ்ச்சிகள் தெரிவது,
5. நம்மையறியாமல் வரப் போகும் நிகழ்ச்சிகள் சம்பந்தமாக மனம் பேசுவது,
6. பூர்வஜென்ம ஞானம்,
7. சகுனங்கள்.

உடல், உணர்வு, மனம், ஆன்மா ஆகிய நான்கு பகுதிகட்கும் சூட்சுமத் தேகம் உண்டு. முதுகின் மேல் பறக்கும் வண்டு மாட்டின் பார்வைக்குத் தெரியாது. ஆனால் உடலுக்குத் தெரிந்து வாலால் ஓட்டுகிறது. இது உடலின் சூட்சுமப்பகுதி. காலில் ஒருவருக்குக் காயம் பட்டுவிட்டது, ஆறி வருகிறது. ஆறும்வரை அவர் தம் கையைக் காலுக்கு 3" தூரத்தில் கொண்டுவந்தால் காலைத் தொடுவதுபோன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டு வலிக்கிறதாகச் சொன்னார்.

நெடுநாளைய பக்தர். அன்னைக்கு நெருக்கமானவர். அன்னை சமாதியானபின் அவருக்கு மனம் மாறிவிட்டது கடுமையான கட்டுப்பாட்டை உயர்ந்த முறையில் ஏற்றவர் எனப் பெயர் வாங்கியவர். ஏனோ அவருக்கு அதுவரை பாராட்டாத ஆசைகளை அனுபவிக்க மனம் துடித்தது. வயதாகிவிட்டதாலும், அவர் வாழ்வுக்குப் பணமே தேவையில்லை என்பதாலும், பிரம்மச்சாரி என்பதாலும், அவருக்குப் பணமோ, பதவியோ, பெண்ணோ பிரச்சினையில்லை. செயலால் அவரால் எந்தத் தவறும் செய்ய முடியவில்லை. பழைய நெடுநாளையக் கட்டுப்பாடு தடுத்தது. ஆனால் மனத்தால், செயலால் விலக்கிய அத்தனை ஆசைகளையும் அனுபவித்தார். யாரைப் பார்த்தாலும் பணத்தைப் பற்றிப் பேசுவார். "பணம், பணம், பணம்" என்பார். அவருடைய அறைக்கு வெளியேயும், உள்ளேயும் துர்நாற்றம் எழுந்தது. சூட்சுமமானவர்கட்கு ஆசை துர்நாற்றமுடையது, கட்டுப்பாடு நறுமண முடையது எனத் தெரியும். இது உணர்வின் சூட்சுமம் **subtle vital**.

ஐன்ஸ்டீனுக்கு மனதில் $E = MC^2$ என்ற சூத்திரம் தெரிந்தது. அது மனத்தின் சூட்சுமம். அன்னைக்கு **Mantra of Life** வாழ்வின் மந்திரம் சமஸ்கிருதத்தில் தெரிந்தது ஆன்மீகச் சூட்சுமம்.

ஜடம், சூட்சுமம், காரண தேகம் **gross, subtle, causal bodies** என்ற 3 பிரிவுகளுண்டு, காரணத் தேகம் சத்திய ஜீவியத்திற்குரியது.

கனவு வருவது ஆழ்மனம், அடிமனத்திலிருந்து எழுகின்றது. ஆழ்மனத்திலிருந்து வரும் கனவுகள் அர்த்தமற்றவை. அடிமனத் திலிருந்து எழுபவை நடக்க இருப்பவைகளைக் காட்டும்.

இரட்டைப்பிள்ளைகள் சூட்சும உடலால் பிணைக்கப்பட்டிருப் பார்கள். ஒருவருக்கு நேர்வது அடுத்தவருக்கு உடனே தெரியும். **Corsican Brothers** என்ற பிரெஞ்சு நாவல் இரட்டையரின் ஒரே உணர்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

❊ ❊ ❊



**"அன்பர் உரை"**

# அகந்தை விரிவடைந்தால் - வாழ்க்கை சுருங்கும்
# ஆன்மா மலர்ந்தால் - வாழ்க்கை விரிவடையும்

*(சென்னை - பெரம்பூர் ரிஷி இல்லத் தியானமையத்தில் 30.1.2000 அன்று திருமதி. உஷா ராமதாஸ் நிகழ்த்திய உரை)*

கர்வம், திமிர், ஆடம்பரம், ஆர்ப்பாட்டம், அலட்சியம் போன்ற குணங்களை நாம் அகங்காரம், ஆணவம், அகந்தை என்கிறோம். ஆன்மீக நோக்கில் இவை சரி என்றும், உடலுக்குட்பட்ட எந்த அம்சமும் அகந்தைக்குரியதாகக் கருதப்படும். ஆண்டவனும் இயற்கையும், அனந்தம். அவை தவிர அனைத்தும் வரையறைக் குட்பட்டன. அவை எல்லாம் அகந்தையின் வாரிசுகள்.

எனக்குச் சப்பாத்தி பிடிக்கும் என்பது குணம். ஆனால் பிடிக்கும் என்றால், பிடிக்காது என்பது எழும். அவை நம் குணத்தை ஒரு அளவுக்குட்படுத்துவதால் ஆண்டவனைப் பிரதிபலிக்க முடியாது என்பதால் மறைமுகமாகக் குணம் அகந்தைக்குத் துணை செய்யும். அகந்தையைக் களைய முற்படும்பொழுது குணத்தைக் களைய வேண்டும். இந்நோக்கில் குணம் ஒரு வகையில் அகந்தையைச் சார்ந்ததாகும்.

உலகில் சர்வமும் பிரம்மம் என்பது சட்டம். நாம் மரம் என்பதை ரிஷி பிரம்மமாகக் காண்கிறார். பிரம்மம் தன் பகுதியை மரமாக நினைப்பதால் பிரம்மம் மரமாகிறது என்பது தத்துவம். அதே சட்டப்படி பிரம்மம் தன்னை அகந்தையாகக் காண்பதால் அகந்தை உற்பத்தியாயிற்று என்று நாம் கொள்ள வேண்டும்.

மனிதன் மனிதனாக இருக்கிறான். அவன் இஷ்டப்பட்டால் பிரம்மமாகலாம், அகந்தையாகலாம், எதுவுமாகலாம். அது ஆன்மீகச் சுதந்திரம். சிறைப்பட்ட ஆன்மா இருக்கும் நிலையிலிருந்து மாற

முடியாது. விடுதலையடைந்த ஆன்மா தன்னை எதுவாகவும் மாற்றிக் கொள்ள முடியும். விடுதலை தருவது **Self Awareness** தன்னை அறிதலாகும். அகந்தை தான் அகந்தை என அறிவது அதனினின்று விடுதலை பெறுவதற்கு முதற்படி. தான் செய்த தவற்றை மனம் ஏற்காது. தவறு என அறிவு புரிந்து கொண்ட பின்னரும் அதை மனம் புறக்கணித்துப் பேசும். நாமுள்ள மனநிலையை விரும்பிப் பாராட்டுவது மனத்தின் போக்கு. நான் அகந்தை என அறிவது கடினம். புரிந்தபின் மனம் அதைவிட்டு மாறச் சம்மதிக்காது. தன் அகந்தை நிலையை விரும்பி ரசிப்பது மனித குணம்.

**தன்னை அறிவது முதற்படியானால், அறிந்ததை ஏற்பது அடுத்த நிலை.**

இரண்டையும் செய்த பின் அகந்தை ஒரு பிறவியில் அழியாது. ஞானம் வரும். ஆனால் சித்திக்க அருள் வேண்டும். பல பிறவி களிலும் அகந்தையின் முனை மழுங்குமே தவிர அகந்தை கரையாது. அகந்தை கரைந்தால் மனம் விசாலமடைந்து இறைவன் **(Cosmic Self)** தரிசனம் கிட்டும். அது பெரிய நிலை. தவத்தால் பெறுவது. கல்வியால் பெறமுடியாது. தவமுயற்சியால் மட்டும் கிட்டும். ஆன்மீகப் பலனை அருள் பெற்றுத் தரும் என்பது அன்னையின் உண்மை. மனிதன் தன் பங்கைச் செய்தபின் பாரத்தை அன்னையிடம் செலுத்தினால் பெருமுயற்சியால் பெற வேண்டியதை அருளால் உடனே பெறலாம். அதற்குரிய மார்க்கம் சமர்ப்பணமும், சரணாகதியுமாகும்.

நடைமுறையில் நாம் முன்னேற விரும்பினால், அகந்தையை வளர்க்கிறோம். கோபப்பட்டால்தான் காரியம் நடக்கும். கோபப்படுகிறோம். காரியம் நடக்கிறது. ஆன்மா சுருங்குகிறது. முடிவாக வாழ்வே சுருங்கும்.

பொதுவாக மனித முன்னேற்றம் என்பது அகந்தை வளர்வதாகும். சொத்து, பதவி, செல்வாக்கு, அறிவு வளர்வதை முன்னேற்றம் என்கிறோம். அது உண்மை. நடைமுறையில் அவற்றை



நாம் நம் அகந்தையை வளர்க்கும் கருவியாகப் பயன்படுத்துவதால் அகந்தை விரிவடைகிறது, ஆன்மா சுருங்குகிறது.

அகந்தையே ஜீவாத்மா எனக் கருதுபவரும் உண்டு. பெரும்பாலும் ஆன்மீகச் சித்திகள் அகந்தையின் சித்திகள் என்கிறார் பகவான். அகந்தையின் வேர் மனதிலும் அதன் சிக்கல் உணர்விலுமிருப்பதாகக் கூறுகிறார்.

அகந்தையை அழிக்க வேண்டும் என மனிதன் பேசலாம். அகந்தையெனில் என்ன, அதை அழிப்பது என்றால் என்ன என்று விவரமாகத் தெரிந்த பின் "இது எனக்கு வேண்டும்" என்பது வழக்கம். விவரம் தெரியாதவர்கள் விருப்பமாகப் பேசலாம். கீழ்க்கண்ட மனநிலைகளைப் பார்ப்போம்.

1. நான் நல்லவன், நல்லவன் எனப் பெயர் வாங்கப் பிரியப் படுகிறேன்.
2. பிறர்க்குதவி செய்வது நல்லது. அதுவே என் இலட்சியம்.
3. மனிதனுக்கு இலட்சியம் தேவை.
4. எதிரி தவறானாலும் அவனையும் ஆதரிக்கும் எண்ணம் எனக்குண்டு.
5. நாட்டுக்காக வாழ்வதே என் வாழ்வு.
6. நண்பன் எனில் அவன் மடையனானாலும் நான் அவனைப் புறக்கணிக்க மாட்டேன்.
7. கண்ணுக்குத் தெரிந்ததையே நம்புவேன் (empiricism) மற்றதை நம்புவது மூட நம்பிக்கை.

என்பவை நல்ல குணங்கள், உயர்ந்த நோக்கங்கள். இன்று நல்லவர்கள் எனப்படுபவர் தங்கள் அகங்காரத்தை வளர்க்க இவற்றைப் பயன்படுத்துவதால் முடிவாக வளர்வது அகந்தையே. எதிரி யிடம் உஷாராக இருக்கலாம். நண்பனை நம்புகிறோம். நண்பனுக்குத் துரோக மனப்பான்மை வந்துவிட்டால் நண்பன் என்பதால் நாம் சந்தேகப்படாததால் நண்பனுடைய துரோகத்திற்குப் பலியாகிறோம்.

நாம் அகந்தையை அழிக்க முற்பட்டால் நானே ‘அதைச் செய்கிறேன்’ என அகந்தை முன் வந்து ஏற்றுக் கொள்கிறது. அதனால் நாம் ஏமாந்து போகிறோம். அகந்தையை அழிக்க நாம் முற்படும்பொழுது நாம் நம்மையறியாமல் அகந்தையை வலுப்படுத்துகிறோம். காலம் காலமாக நம்மை அகந்தை இதுபோல் ஏமாற்றுகிறது என்பது ஆன்மீக வரலாறு.

இதற்கு என்ன வழி? ஸ்ரீ அரவிந்தம் ஒரு வழியைக் காட்டுகிறது. நம்முடைய பெரு முயற்சி தோல்வியடைந்தால் நாமே சரியில்லை எனப் பொருள் என்பதால், நம்மை நம்புவதைவிட அன்னைக்குச் சரணம் செய்து அன்னையை நம்புவது வழிவிடும் என்பது ஸ்ரீ அரவிந்த சித்தாந்தமாகும். நமக்கு வழி புலப்படாத பொழுது அன்னை கொடுப்பதை மட்டும் ஏற்கும் மனப்பான்மை சரணாகதியாகும். இது கடினம் என்கிறார் பகவான்.

**சரணாகதியை ஏற்றால் அகந்தை அழியும்.**

அதை நம்மால் உளமார ஏற்க முடிவதில்லை. நமக்கு (**unconscious**) நம்மை அறியாமல் அகந்தை வாழ்வில் முழு ஈடுபாடுண்டு. அது பொய்யான வாழ்வு. அபிப்பிராயத்தை விடமுடியவில்லை (**opinion**), நோக்கத்தை (**attitude, motive**) மாற்ற முடியவில்லை என்று நாம் அகந்தையைப் பற்றிக் கொள்கிறோம். அன்னையை மட்டும் ஏற்பதானால்,

* நம் அபிப்பிராயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்.
* நம் நோக்கங்களைக் கைவிட வேண்டும்.
* அன்னையை அடைவதை மட்டும் நோக்கமாக ஏற்க வேண்டும்.
* அகந்தையின் எல்லாப் பேதங்களையும் தவிர்க்க வேண்டும்.
* அதன் மூலவேர் சிந்தனையிலிருப்பதால் சிந்திப்பதை நிறுத்தவேண்டும்.
* அதன் சிக்கல் ஆசையிலிருப்பதால் ஆசையை அகற்ற வேண்டும்.



சரணாகதி எனில் நாம் என்பது எந்த உருவத்திலுமிருக்க முடியாது. என் தகப்பனார் பேச்சைக் கேட்டால் தவறு வருகிறது எனில், அகந்தை, சமர்ப்பணம் என்னாவது? என்னால் தகப்பனார் பேச்சைத் தட்ட முடியாது என்பது எவ்வளவு உயர்ந்ததானாலும் காரியம் கெட்டுப் போகிறது என்றபொழுது மனம் பல வகைகளிலும் செயல்படுகிறது. ஏராளமான பணம் செலவு செய்து கிடைக்கும் பெரிய அட்மிஷன் எனக்குத் தகுதிக்குக் கிடைத்த பொழுது, தகப்பனார் அதில் சேர வேண்டாம் எனில் நான் செய்யக் கூடியது என்ன? அகந்தை எப்படி வருகிறது? சமர்ப்பணமும், சரணாகதியும் என்ன செய்யும்?

ஒரு பையன் தகப்பனார் பேச்சைக் கேட்க முடிவு செய்தால் அவனுக்கு இந்த இக்கட்டான கட்டம் வாராது. தனக்கு சௌகரியமான சமயத்தில் மட்டும் கேட்பது என்பவனுக்கே இது வரும். பையன் மனம் உண்மையாக இருந்தால் அவன் யோகப் பாதையில் உயர்ந்து வரும் பொழுதுதான் இந்நிலை எழும். அப்பொழுது தன் மனத்தை ஆராய்ந்து பார்த்தால் “நான் தகப்பன் சொல்லைத் தட்டமாட்டேன்” என்ற உருவில் அகந்தையிருக்கும். அதைக் கண்டு மனம் மாறிய அதே நேரம் பையனைத் தகப்பனும் ‘உன் இஷ்டப்படி சேர்ந்துகொள்’ என்பார். அன்பர்கள் வாழ்வில் அநேகமுறை நாம் கண்ட உண்மை அனுபவம் இது.

எனக்கு அன்னை வேண்டும், அன்னை மட்டும் வேண்டும், அன்னை மூலம் வருவதுமட்டும் போதும் என்ற நிலை சரணாகதிக்குரிய நிலை. அவர்கட்கு மேற்சொன்ன இக்கட்டான நிலை ஒரேயொருமுறையும் எழுந்ததில்லை. மனம் ஏதாவது ஒருவகையில்

* மகள் கேட்பது சரியில்லை. இல்லை என்றுகூட என்னால் சொல்ல முடியாது.
* அதிகாரி கோபமாக இருக்கிறார் அவரை மறுத்துச் செயல்பட முடியாது.
* இந்த விலையை குறைக்காவிட்டால் மார்க்கெட் போய்விடும்.

* வேலைக்காரி அநியாயம் செய்கிறாள், கேட்டால் சண்டை போடுவாள்.

என்ற நிலைகளில் **நாமே ஒரு முடிவை எடுத்துவிட்டு** அம்முடிவைச் சமர்ப்பணம் செய்து பலன் எதிர்பார்ப்பவர் சரணாகதி பூரணமில்லை. கடைசிகட்ட முக்கிய முடிவைத் தம் பிடியில் வைத்துக் கொண்டு செய்யும் சமர்ப்பணம் சமர்ப்பணமாகாது. மகள் கேட்பதைச் சமர்ப்பணம் செய்தால் மருமகன் "கேட்காதே" என்பார். அதிகாரியை என்னால் மறுக்க முடியாது என்பது என் முடிவு. அதை நான் மாற்றிக் கொண்டு நியாயத்தை பயப்படாமல் செய்ய முன் வந்து அம்முடிவைச் சமர்ப்பணம் செய்த அதே க்ஷணம் அதிகாரி அறையில் நிலைமை மாறும். விலையைக் குறைப்பது நம் முடிவு. நாம் முடிவு செய்யாமல் சமர்ப்பணம் செய்தால் மார்க்கெட் மாறி விலையேற ஆரம்பிக்கும். வேலைக்காரியைக் கண்டு பயப்படாமல் நியாயத்தைக் கேட்க முடிவு செய்து முடிவைச் சரணம் செய்தால் "அம்மா சொல்வது சரிதான்" என வேலைக்காரி கூறுவாள் என்பவை அன்றாட அன்பர் அனுபவம்.

* முடிவின் பகுதி நம் பிடியிலுள்ளவரை சமர்ப்பணம் பூர்த்தியாகாது.
* பூர்த்தியாகாத சமர்ப்பணம் சரணாகதிக்குத் துணை செய்யாது.
* சரணாகதியை அகந்தை எதிர்கொள்ள முடியாது.
* நம் மனம் அன்னை பக்கம் உள்ளவரை அகந்தைக்கு வெற்றியில்லை.
* நமக்குத் தயக்கம் உள்ளவரை நமக்கு வெற்றியில்லை.
* அகந்தை வென்றால், ஆன்மா சுருங்கும்.
* சுருங்கும் ஆன்மாவால் வாழ்வு நிரந்தரமாக மலராது.
* அகந்தை வளர்வதால், வளரும் வாழ்வு நிலையானதன்று, சரியானதுமன்று.
* எதிர்காலம் ஆன்மாவுக்கு, அகந்தைக்கில்லை.

❋ ❋ ❋





# தமிழாசிரியர்

இல. சுந்தரி

திருக்கோவிலூருக்கு அருகில் ஒரு கிராமம். ஒரு தொடக்கப் பள்ளி, குறைந்த வசதிகளுடைய மருத்துவமனை ஒன்று, பஞ்சாயத்துப் போர்டு கட்டடம் ஒன்று, நீள நீளமான மூன்று தெருக்கள், சுற்றுக் குப்பம் ஒன்று.

இவ்வூரில் ராதாகிருஷ்ண செட்டியார் செல்வந்தர், நியாயச் சிந்தையுடையவர், ஓரளவு படித்தவர், ஊரில் மிகுந்த செல்வாக்குடையவர். பசுக்களும் எருமைகளுமாய் கொட்டிலில் மாடுகள். அக்கம்பக்கத்துச் சிற்றூர்களுக்கு நினைத்த நேரத்தில் சென்று வர வில்வண்டி ஒன்று. பெரிய அளவு நிலப்பரப்பு வயல் இவருடையது. பரம்பரை பரம்பரையாய் வீட்டில் வேலை செய்யும் வண்டிக்காரன், வேலைக்காரி, வேலைக்காரன் என்று ஆட்கள். பட்டணத்தில் படித்து உயர் பதவியில் வசதிகளோடு வாழும் இவர் மகன் எப்போதேனும் கிராமத்திற்கு வருவான். மற்றபடி ஊர்மக்களே இவர் மக்கள். பெற்ற செல்வத்தை ஊரார் நலனுக்குச் செலவிடுவார். உற்றார் உறவினர்க்கும் செய்வார். எல்லோரிடமும் இவர்க்கு மதிப்பும் மரியாதையுமிருந்தது. ஊர்மக்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஆரம்பப் பள்ளியை உயர் பள்ளியாக்க எல்லா முயற்சிகளும் செய்தார். அதன் விளைவாய் உருவான பள்ளிக்கு மேலும் சில ஆசிரியர்கள் வெளியூரிலிருந்து வந்தனர். அக்கம்பக்கத்து ஊரிலிருந்து வரும் ஆசிரியர்கள் காலையில் வந்து மாலையில் ஊர் திரும்ப பஸ் வசதியிருந்தது. ஒரே ஒரு புது ஆசிரியர் வெகு தொலைவிலிருந்து வரவேண்டியிருந்தது. இவர் தமிழாசிரியர். இவருக்கு உள்ளூரிலேயே தங்கும் வசதியை ஏற்படுத்தும் பொறுப்பை செட்டியார் ஏற்றார்.

'வேலு' என அழைத்தார் செட்டியார். இவர்கள் வீட்டுப் பரம்பரை வேலையாள் முனியனுடைய பையன் வேலு. 12 வயதுச் சிறுவன். 5 ஆம் வகுப்புவரை உள்ளூர்ப் பள்ளியில் படித்திருந்தான். முழுநேர வேலையாளாய், தன் தகப்பனால் இந்த வீட்டில் கொண்டுவிடப்பட்ட

வன். சிறு வயதில் தாயை இழந்து தகப்பனால் வளர்ந்தான். தகப்பனும் மறைந்தபின் இந்த வீடே அவன் வாழ்வாகிவிட்டது படிக்க முடியவில் லையே என்ற ஏக்கம் மிகுதியும் உண்டு. ஆனால் என்ன செய்ய முடியும்? இவனைப் போன்ற வேலைக்காரர்கள் கிராமங்களில் பரம்பரை பரம்பரையாகப் பணியைத் தொடர்வதையே பழக்கமாய்க் கொண்டுள்ளார்கள். வேலு நல்ல சுறுசுறுப்பும் நன்றியுணர்வும் கொண்டவன். படிக்க வைத்தால் படிப்பு வரும். ஆனால் இவன் தந்தை தனக்குப்பிறகு தன் மகன் நல்ல இடத்தில் வேலைக்குச் சேரவேண்டும் என்று செட்டியார் வீட்டில் வேலை பழக்கிவிட்டான். செட்டியாரும் அவர் மனைவியும் நல்லவர்கள். பொழுதுக்கும் ஏதேனும் வேலையிருக்கும். பெரிய செல்வாக்குக் குடும்பம். ஏனென்று கேள்வி கேட்காமல் இட்டதைச் செய்யும் ஆட்கள் அவர்களுக்குத் தேவை. வயிற்றுப்பாட்டிற்கு வஞ்சமில்லாது சோறு போடுவார்கள். நல்ல நாள், பெருநாட்களில் உடுக்க துணி எடுத்துத் தருவார்கள் ஏழைகளுக்கு. அதுவே போதுமானதாயிருந்தது. அதனால் அவர்கள் பட்டம் பதவிக்கு ஆசைப்படுவதில்லை. ஆனாலும் வேலுவுக்குப் படிப்பில் ஆர்வமுண்டு. உள்ளூரில் இருந்து ஐந்து வகுப்புப் படித்துவிட்டான். வெளியூர் அனுப்பிப் படிக்க வைக்கவில்லை. வேலையிலும் சேர்ந்துவிட்டான். இந்நிலையில்தான் உள்ளூரிலேயே உயர்பள்ளியும் தொடங்கப்போகிறது. செட்டியாருடன் அவனும் போவான். அந்த வகுப்பறைகளில் அமர்ந்து படிக்க எத்தனையோ ஆசை. ஆனால் சொல்லத் துணிவில்லை.

செட்டியார் வீடு பங்களா வீடு. பக்கத்து ஓட்டு வீட்டைச் சுத்தம் செய்து வரப்போகும் ஆசிரியர் தங்குவதற்கு ஏற்பாடு செய்ய இவனுக் குச் செட்டியார் உத்தரவிட்டிருந்தார். வேலைக்காரப் பொன்னம்மா வீடு கழுவ கொல்லைப்புறத்துக் கேணியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். தட்டு முட்டுச் சாமான்களைத் தோட்டப்பக்கத்து அறைக்கு மாற்றினான். வீட்டை ஒழுங்கு செய்தான். இந்த வீட்டில் ஓர் ஆசிரியர் குடிவரப் போகிறார் என்பதே மிகுந்த மகிழ்ச்சி தந்தது. படுத்துக்கொள்ள கட்டிலைத் தட்டிப் போட்டு, துணி உலர்த்த கொடி கட்டி, புத்தகங்கள் வைக்க அலமாரிகளைச் சுத்தம் செய்து, பொறுப் பாகப் பார்த்துப் பார்த்துச் செய்தான். செட்டியார் வந்து பார்த்து “எலே



பயலே வேலு, நீ பெரிய ஆள்தான் போ, சும்மாக் கிடந்த வீட்டை இத்தனை அழகா மாத்திட்டியே” என்றார். வேலுவுக்குப் பெரிய விருது பெற்றாற்போலிருந்தது. இயற்கையிலேயே அவன் உழைப்பாளி. அதிலும் வரப் போவது ஆசிரியர். அவனுக்கோ படிப்பு என்றால் கொள்ளை விருப்பம். பள்ளிக்கூடம் சென்று படிக்க முடியாவிட்டாலும் ஓர் ஆசிரியருக்குத் தொண்டு செய்ய அவனுக்கு ஆசை. வரப்போகும் ஆசிரியரை மானசீகமாய் வணங்கினான். வீடு தயாராகிவிட்டது. ‘வாத்தியாரய்யா தனியா வருவாரா, பெஞ்சாதியோட வருவாரா? வீட்டு அம்மா வந்தால் எனக்கு சந்தோசம்தான். வாத்தியார் பள்ளிக்கூடம் போகும் நேரம் அம்மாவுக்கு ஒதவியா கறிகாயெல்லாம் வாங்கியாந்து சின்ன சின்ன ஒதவியெல்லாந் செய்து தருவேன்’ என்று தனக்குள் பேசிக் கொள்கிறான்.

‘ஏலே வேலு’ என்றார் செட்டியார். ஓடிவந்து இரண்டு கைகளை யும் குறுக்கே கட்டிக்கொண்டு, ‘வந்தேன் எசமான்’ என்கிறான். வள்ளுவர் அழைத்தவுடன் கிணற்றுக் கயிற்றை அப்படியே விட்டு விட்டு அவர் மனைவி வாசுகி வந்தது மெய்யோ பொய்யோ செட்டியார் அழைத்தவுடன் அப்படியே ஓடிவரும் வாசுகித்தனம் இவனுக்குண்டு. இந்த அவனுடைய பணிவும் விரைவும் செட்டியார்க்கு மிகவும் இதம் தருவது.

“நான் பக்கத்து ஊர் நாயக்கர் வீட்டு விசேஷத்துக்குப் போகிறேன். வர பொழுதுசாஞ்சுடும். நீ மறக்காம பஸ்ஸுக்கு போயி வாத்தியாரய் யாவை வீட்டுக்குக் கூட்டி வந்திடு. ஏதாச்சும் வேணுமினா வீட்ல அம்மணியிடம் (இவர் மனைவி) வாங்கிவந்து கொடு. நான் இராவுக்கு வந்து பாக்கறேன்” என்றார். ‘சரிங்க எசமான்’ என்று பணிவுடன் கூறினான் புன்முறுவலுடன். செட்டியார் புறப்பட்டார். அவர் வண்டியில் ஏறுவதற்கு முன்னால் ஓடிப்போய் வண்டியின் குறுக்குக் கம்பியைப் பூட்டி அவர் வெள்ளி வெற்றிலைப் பெட்டியைப் பணிவாக நீட்டினான். புறப்பட்டதும் உள்ளே திரும்பினான். இவனும் அவருடன் போகும் போதெல்லாம் வெற்றிலைச் செல்வத்தை (பெட்டியை) இவனே வைத்துக் கொண்டு தேவைப்படும்போது கொடுப்பான். இவன் உடன் செல்லாத போது பெட்டியில் நல்ல வெற்றிலை சீவல் சுண்ணாம்பு இவற்றைச் சரிபார்த்து வைத்துக் கொடுப்பான்.

உள்ளே வந்து கடிகாரம் பார்த்தான். மாட்டிற்கு வைக்கோல் உதறிப்போட்டான். வேலைக்காரப் பொன்னம்மாவிடம் எள்ளு காயப் போட்டு கவனமாய்ப் பார்க்கும்படிச் சொல்லிவிட்டு அம்மாவிடம் சொல்லிக் கொண்டு பஸ் பார்க்கப் புறப்பட்டான். அதாவது இவர்களின் நீண்ட தெருவைக் கடந்து திரும்பும் சின்னத் தெரு ஒரு புறம் குடிசையும், ஒரு புறம் வயலுமாய் இருக்கும். அதையும் கடந்தால் பஸ் போகும் பெரியசாலை வரும். இந்தச் சின்னத் தெருவை அந்தச் சாலையுடன் இணைக்கும் இடத்திற்கு வலப்பக்கம் ராவுத்தர் டீக்கடை. அதையடுத்து வெற்றிலைப்பாக்குக் கடை, விறகுக்கடை என்று சில கடைகள். இடப்பக்கம் ஐயர் கடை என்ற சிற்றுண்டிச்சாலை. அதையடுத்து சின்ன சின்னக் கடைகள். ராவுத்தர் கடைக்குச் சற்றுத் தள்ளி பரந்த நிழலாகும் ஓர் ஆலமரம். இதனடியில் திண்ணைபோலக் கருங்கல் பதிப்பு. இதுதான் இந்தக் கிராமத்தின் பஸ் ஸ்டாண்டு. இங்குதான் வரும் போகும் பஸ்கள் நின்று மக்களை இறக்கியும் ஏற்றியும் செல்லும்.

8.30 வண்டியில் பார் என்று செட்டியார் சொன்னதால் 8.15க்கே வந்து விட்டான் வேலு. ராவுத்தர் தம் டீ வியாபாரத்தினிடையே வேலுவைச் சீண்டினார். "என்ன வேலு? காலங்காட்டியும் பஸ்ஸுக்கு வந்திருக்கே யார் வர்ராங்க?" என்றார்.

"நம்மவூர் பெரிய பள்ளிக்கூடத்துக்குப் புது வாத்தியாரய்யா வரப்போறாரில்ல அவரை இட்டுப் போகத்தான் வந்தேன்" என்றான்.

"என்னமோ நீ படிக்கற பள்ளிக்கூட வாத்தியார் மாதிரியல்ல பேசுற?" என்றார் ராவுத்தர்.

"ஏன் ராவுத்தரே இப்படிச் சொல்றீங்க, நம்மவூர் பள்ளிக் கூடத்துக்கு வர்ர வாத்தியார்னா நமக்கெல்லாம் பொறுப்பில்லையா?" என்றான் பெரிய மனுஷன்போல்.

'செட்டியார் வூட்டுச்சோறில்ல இப்படித்தான் பேசுவ' என்றார் ராவுத்தர்.

எதற்கு வீண்வம்பென்று, ரோட்டைப் பார்த்தவண்ணம் மரத்தடியில் போய் அமர்ந்து கொண்டான். சிறிது நேரத்தில் சிவப்பும்,



மஞ்சளும் கலந்த வண்ணத்தில் அரசுப்பேருந்து தொலைவில் வருவது தெரிந்தது. பஸ்ஸில் ஏறப்போகிறவர்கள் மூட்டை முடிச்சுகளைச் சரிபார்த்தனர். இவனும் எழுந்து கொண்டான் தலையில் சுற்றியிருந்த துண்டைக் அவிழ்த்து உதறித் தோளில் போட்டவண்ணம் வாத்தியா ரய்யாவைக் கண்டு பிடிக்க தயாரானான். தலையில் டர்பன் கட்டி பஞ்சகச்ச வேட்டியுடுத்து முழுக்கைச் சட்டைமேல் கோட்டுப்போட்டு நீள அங்கவஸ்த்திரம் பாம்புபோல் கழுத்தைச் சுற்றிக் கிடக்க கம்பீரமாய் ஓர் ஐம்பது வயது உருவத்தை எண்ணி, பஸ்ஸிலிருந்து இறங்குபவர்களை பஸ் நின்றதும் ஆர்வத்துடன் அருகில் சென்றான். உள்ளூர்வாசிகள் ஒவ்வொருவராய் இறங்க இறுதியாக ஊருக்குப் புதியவர் ஒருவர் பொறுமையாய் இறங்கினார். இளைஞர் தோளில் மாட்டிய நீளப்பையுடன் கையில் பெரிய சூட்கேசுடன் இறங்கினார். மிக மென்மையான சாயல் உடையவராயிருந்தார். பெண்ணின் கண்போல நீண்ட கருணை மிகுந்த விழிகள். மென்மையான உணர்வுடையவர் என்பது போல் சிறிய உதடு. அறிவுக் கூர்மையைக் காட்டும் கூரிய நாசி. சுருள்சுருளான முடிக்கற்றைகளை அலையலையாய் சீவியிருந்தார். கறுப்பு நிற வாரில் பொருந்திய பெரிய கைக்கெடியாரம். தூயவெண்ணிற வேட்டியும் வெண்ணிற முழுக்கைச் சட்டையும் பார்த்தவுடன் இவர் பண்பாளர் என்ற தோற்றப் பொலிவு. அருகே சென்ற வேலு இரண்டு கைகளையும் கூப்பி "கும்பிடறேன் சார்" என்றான் பணிவுடன். 'வணக்கம் தம்பி' என்று சூட்கேசைக் கீழே வைத்துவிட்டுப் பதிலுக்குக் கும்பிட்டார். ஒரு கணம் மெய்மறந்து போனான் வேலு. செட்டியார் வீட்டு வேலைக்காரப் பையன் என்று தெரிந்திருந்தால் வணக்கம் சொல்லியிருக்க மாட்டாரோ 'நீங்கதான் பெரிய பள்ளிக்கூடத்துக்குப் புதிசா வந்திருக்கும் தமிழ் வாத்தியாரய்யாவா' என்று மிகப் பணிவுடன் கேட்டான்.

'ஆமாம் தம்பி நீ யார்' என்று கேட்டார்.

'இந்த வூர்ல எங்க எசமான் செட்டியார் ஐயாதான் ஊர்ப் பெரிய வருங்க, அவுங்க வீட்டு வேலைக்காரப் பையன் நான். எங்க ஐயா அடுத்தவூர்ல ஒரு விசேஷத்துக்குப் போயிருக்கார். அதனால ஒங்கள வீட்டுக்கு அழைச்சிட்டு வர என்னெ அனுப்பினாருங்க' என்றான்.

‘அப்படியா மகிழ்ச்சி’ என்றார்.

‘பொட்டிய இப்பிடி எந்தலைல வச்சுருங்க நாந் தூக்கியாருவேன்’ என்றான். ‘வேண்டாம், வேண்டாம். பெட்டி கனமாயிருக்கு. நீ சிறுபையன். நானே எடுத்து வருவேன் வா போகலாம்’ என்றார்.

இப்படித் தனக்குக் கருணை காட்டும் இந்த சாரை இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது

‘எனக்குப் பளுதூக்கிப் பழக்கந்தான் சார் நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க’ என்று பெட்டியை வலிய தலையில் வாங்கிக் கொண்டான்.

‘உன் பெயரென்ன?’ என்றார் ஆசிரியர்

‘வேலுசாமிங்கறது என் பேருங்க எல்லாரும் என்னை வேலுன்னுதான் கூப்பிடுவாங்க’

‘நீ படிக்கிறாயா?’

‘அஞ்சாங்கிலாஸ் வரை படிச்சிருக்கேன் சார்’. ‘அதற்குமேல் ஏன் படிக்கவில்லை?’

‘எங்க அப்பாதான் ஐயா வூட்ல தனக்குப் பதிலா வேலை செய்யச்சொல்லி கொண்டு உட்டுடுத்து’.

‘வேலை செய்து கொண்டே படிக்கலாமே?’ ‘எனக்கும் ரொம்ப ஆசை தான் சார், ஆனா காலைல வெக்கல் போடனும், 10மணிக்குமேல மாட்டுக்குத் தண்ணி காட்டணும், 11மணிக்குத் தீவனம் வைக்கணும், மாட்டுக்கார கோனார் வரச்சே கூட நின்னு பால் வாங்கி வரணும். திடீர் திடீர்ன்னு அம்மாவும் ஐயாவும் என்னெத்தான் நம்பிக்கையா கூப்பிடுவாங்க. நான் பள்ளிக்கூடம் வந்தா இதையெல்லாம் யார் கவனிப்பாங்க’.

‘உன்னைத் தவிர வேறு ஆட்கள் இல்லையா?’ ‘நெறைய இருக் காங்க. சின்ன வயசுலெ ஆத்தா இல்லாம ஐயா வூட்லதான் வளந் தேன். ஐயா கூட இருந்து பழகிடுச்சு. நா இல்லாம எங்க ஐயாவுக்கு சரிப்படாது. எங்க எசமானி அம்மாகூட பேசாம நீங்க இவனையே கட்டிக்கிட்டிருக்கலாம்’, என்று கேலி பேசுவாங்க.



“உங்க ஐயா அதுக்கு என்ன சொல்வாங்க?” ‘இப்பிடி ஒரு பய கெடைப்பான்னு முன்னாலயே தெரியாதே என்பாரு’ என்று சிரித்தான். ஆசிரியரும் சிரித்தார்.

‘இப்பகூடப் பாருங்க ஒங்கள அழைச்சிட்டு வர்றத்துக்கு என்னை அனுப்பிருக்காரு’ என்று தன் இன்றியமையாமையைத் தெரிவித்தான்.

கள்ளமில்லாத அவன் பேச்சு அவருக்கு மிகவும் பிடித்தது. பேசிக்கொண்டே இவர்கள் வயல்பக்கத் தெருவைக் கடந்து இவர்கள் வீடுள்ள தெருவில் திரும்பினார்கள். ‘அதோ அந்தப் பெரிய மச்சு வீடுதான் எங்க ஐயா வீடு. மத்ததெல்லாம் ஓட்டு வீடுதான் வூர்ல’ என்றான்.

‘எங்க ஐயா வீட்டுக்குப் பக்கத்துல இருக்கற வீடுதான் ஒங்களுக்காக ஏற்பாடு செஞ்சிருக்கு. நேத்து நானும் பொன்னம்மாவும் அந்த வீட்டைக் கழுவி சுத்தமா வெச்சுருக்கோம்’ என்றான்.

‘இவ்வளவு உதவி செய்யறாரே உங்க முதலாளி. மிகவும் நல்லவரா இருப்பார்போல் இருக்கு’ என்றார் ஆசிரியர்.

“ஆமாங்க அது என்னவோ உண்மைதான் எங்க எசமான் நல்ல மனசுக்காரரு” என்றான்.

‘நீ ஏன் அவரிடம் பள்ளிக்கூடம் சேர்க்கும்படிக் கேட்கவில்லை’ என்றார்.

‘கேட்கலாமுங்க, கோவிக்க மாட்டாரு. என்ன இருந்தாலும் நான் வேலைக்காரப் பையன். அவரு போட்ட சோறு துணிதான் எங்களுக்கு. நன்றிக்குத்தான் நாயா இருக்கேன்’ என்றான்.

‘நன்றியறிதல் மிக நல்ல குணம்தான். உங்க ஐயா வீட்ல இன்னும் யாரிருக்காங்க’.

‘எங்க ஐயாவும், அம்மாவும்தான். சின்ன எஜமான் படிச்சிட்டு பட்டணத்திலே பதவில இருக்காரு. எப்பவாச்சும் வருவாரு. வந்தா அவருக்கும் நாந்தான் எல்லாம் என்றான்’. வீடு வந்து விட்டது.

“இதான் சார் ஒங்களுக்கு உள்ள வீடு” என்று வீட்டைக் காட்டி அவர் முன்னே செல்ல பெட்டியுடன் பின்னால் வந்தான். உள்ளே நுழைந்ததும் சிறிய அளவான அந்த வீடு சுத்தமாயிருந்தது. தரையெல்லாம் கழுவிவிடப்பட்டு ஒட்டடை, குப்பை ஏதும் இல்லாது பளிச்சென்றிருந்தது. நடுவில் திறந்த வெளி, முற்றம், சுற்றி தாழ்வாரம், முன்பக்கச் சிறிய அறை, சமையற்கட்டு, சிறிய மேடை, தொட்டி, முற்றம், தோட்டம், கிணற்றங்கரை, துணி, துவைக்கக் கருங்கல், துணிவுலர்த்த கொடி என்று அமைப்பாயிருந்தது. வீடு ‘நல்லாயிருக்கா சார்’ என்று ஆவல் பொங்கக் கேட்டான் வேலு.

‘வீடும் நல்லாயிருக்கு, உன் கைவண்ணம் மேலும் நல்லாயிருக்கு’ என்றார் மகிழ்வாக.

‘முதலில் குளித்துவருகிறேன்’ என்று முன்பக்க அறையில் பெட்டியை வைத்துவிட்டு கிணற்றங்கரையில் சுகமாய்க் குளித்துவிட்டு, வேறு உடுத்தி, உள்ளே வந்தார். முன்பக்க அறையில் சுத்தம் செய்யப்பட்ட மாடத்தில் பெட்டியைத் திறந்து முதன் முதலாக ஒரு படத்தை எடுத்து மிகப் பணிவாக வைத்தார். பெட்டியிலிருந்து சில தட்டுகளை எடுத்து, கையோடு தோட்டத்தில் பறித்து வந்த வண்ண மலர்களை அழகாய் தட்டுகளில் அடுக்கி அப்படத்தின் முன் வைத்து கண்மூடித் தியானித்தார். கூடவே நின்ற வேலு கண்மூடித் தியானித்தவரை கண்கொட்டாது பார்த்தான். அவர் தியானித்த படத்தில் ஒரு பெண்மணி கறுப்பு நிறச் சேலையில் வெண்ணிறப் பூப் போட்டது, தழையவுடுத்தி தலையில் முக்காடிட்டு கம்பீரமாய் மகாராணிபோல் அமர்ந்திருந்தார். அவர் கண்கள் வாத்தியார் சார் கண்கள்போலவே கருணை நிறைந்திருந்தது. சிரிப்பில் முகம் மலர்ந்திருந்தது. பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும் தெய்வீகச் சிரிப்பு. இது யாராக இருக்கும்? பூவைப் படத்தில் சார்த்தாமல் தட்டில் வைக்கிறாரே. ஒரு வேளை இவருடைய அம்மாவாக இருக்குமோ? ஆமாம் இவருடைய சிரிப்பும் இந்த அம்மாவுடைய சிரிப்புப்போல் மலர்ச்சியாய் அழகாயிருக்கிறது. ஒரே ஜாடை, இவர் அம்மாவாகத் தானிருக்க வேண்டும். அம்மாவிடம்



இவ்வளவு பக்தியா? ‘தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை’ என்று படித்திருக்கிறான். என் ஆத்தா முகங்கூட எனக்கு நெனவில்லை. இப்படி போட்டோ படமெல்லாம் ஏது என்று ஏக்கமாய் எண்ணினான்.

திரும்பிய ஆசிரியர், ‘அட வேலு நீ இங்கதான் இருக்கியா?’ என்றார்.

‘ஆமாங்க ஒங்க பலகாரத்துக்கு என்ன வேணும்? எங்க ஐயா எங்க எஜமானி அம்மாகிட்ட சொல்லி வாங்கித் தரச் சொல்லி யிருக்காரு’ என்றான் கையைக் கட்டிய வண்ணம். ‘ஒன்றும் வேண்டாம் வேலு நான் இட்லி கொண்டு வந்திருக்கிறேன். மதியம் நீ சொன்ன ஐயர் கடையில் சாப்பிடுவேன். இப்பொழுது நீயும் என்னுடன் பலகாரம் சாப்பிட வா’ என்றழைத்தார்.

வேலைக்காரப்பையன் என்று இவனைக் கொடுமை படுத்தமாட்டார்கள் என்றாலும் தன்னைச் சமமமாகப் பக்கத்திலமர்த்தி உணவு கொள்ளச் செய்யமாட்டார்கள். அவன் தட்டு தனி. சாப்பிடும் இடமும் தனி. அதெல்லாம் அவனுக்குப் பழகிப் போனது. ஆனால் இங்குத் தன்னுடன் சாப்பிட அழைக்கும் இந்தச் சமதை அவனுக்கு நெஞ்சை நெகிழவைத்தது.

‘இல்லசார் நா வூட்ல போய் சாப்பிடுவேன்’ என்றான், ‘இருக்கட்டும் வா இப்போது எனக்காக என்னுடன் சாப்பிடு எனக்கு மகிழ்ச்சியாயிருக்கும்’, என்று ஓரிலையில் அவனுக்கு இட்லியும் பொடியும் வைத்துத் தானும் ஓரிலையில் வைத்துக் கொண்டு அவனைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டார். ‘சாப்பிடு’ என்று பரிவாகக் கூறித் தாமும் உண்ணத் தொடங்கினார். பயந்த வண்ணம் இட்லி உண்டான் வேலு. ‘சார் எங்க எஜமானுக்குத் தெரிந்தால் ஏசுவார்’ என்றான்.

‘சரி, சரி யாருக்கும் தெரியாது நீ கவலைப்படாதே’ என்றார் உண்ட இலையைத் தோட்டத்துக் குப்பைமேட்டில் எறிந்து உண்ட இடத்தைச் சுத்தம் செய்தான்.

‘சார் இந்த அம்மாதான் ஒங்க அம்மாவாசார்? ஒங்க மாதிரியே சிரிக்கிறாங்க சார், இவங்கள எனக்கு ரொம்பப் புடிக்குது சார்’ என்றான்.

‘அப்படியா, நீயும் இவங்களை அம்மானே சொல்லலாம்’, என்றார்

‘இவங்க படத்தை வெச்சுப் பூ வெக்கறீங்களே, இவங்க இப்ப இல்லியா?’.

‘ஆமாம். இவங்க நம்மக் கண்ணுக்குத் தெரியறமாதிரி இல்ல. ஆனா மனசல நெனச்சா தெரிவாங்க, எல்லா உதவியும் செய்வாங்க’. ’தெய்வமாயிட்டாங்களா’ என்று வாத்தியார் மனம் வருந்தா வகையில் தன் கருத்தைக் கூறினான்.

“ஆமாம். தெய்வம் ஆகிவிடவில்லை, தெய்வமாகவேதான் எப்போதும் இருக்காங்க” என்றார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை ஆனால் பிடித்தது.

“அப்போ நீங்க ஒங்க அம்மாவைத்தான் வேண்டிப்பீங்களா?” என்றான்.

“ஆமாம் வேண்டிக்கிறது மட்டுமில்ல, எதைச் செய்தாலும் அவங்களை நெனச்சுத்தான் செய்வேன். அவங்க எப்பவும் எனக்குத் துணையாயிருக்காங்க” என்றார்.

‘ஒங்க அம்மாவிக்கு நானும் பூ வெக்கலாமா’ என்றான் ஆர்வமாக.

‘இவங்க எனக்கு மட்டும் அம்மாவில்ல, இவங்களை நேசிக்கிறவங்க எல்லாருக்கும், நேசிக்கத் தெரியாதவர்களுக்கும் இவர்தான் அம்மா. நீயும் பூ வைக்கலாம். ஏதாவது வேண்டிக்கொண் டால் நடக்கும். உனக்கு என்ன வேண்டிக்கொள்ள ஆவல்?’ என்றார்.

‘எனக்கு ஒங்களமாதிரி நல்லவங்களா எல்லாரும் கிடைக்கணும்’ என்றான்.

என்ன உயர்ந்த உள்ளம் இவனுக்கு.

‘அது சரி பள்ளிக்கூடம் சேர்ந்து படிக்க ஆவலில்லையா?’



‘இருக்கு சார், ஆனா எசமான் வீட்டு வேலையை விடறது நன்றி கெட்ட வேலையாயிடுமே. ‘சரி உன் நல்ல மனதிற்கு யாவும் நல்லதாகவே நடக்கும். இன்னும் ஒரு செய்தி வேலு, நம்ப அம்மாவுக்கு எல்லாப் பூவும் வைக்கலாம். ஒவ்வொரு பூவின் வாயிலாகவும் ஒவ்வொரு சக்தியை வெளிப்படுத்துவார். ரோஜாப்பூ அம்மாவுக்கு ரொம்பப் பிடிக்கும். ‘அப்டீன்னா எங்க ஐயா பங்களாவில் முன்பக்கத்துல கலர் கலரா காகிதப் பூக்களெல்லாம் இருக்கே அது கூட இந்த அம்மாவுக்கு வைக்கலாமா? எங்க வீட்டு அம்மா வாசனை உள்ள பூக்களெல்லாம்தான் சாமிக்கு வைப்பாங்க?’ என்றான்.

‘நமக்கு மிகத் தேவையான பாதுகாப்பை அந்தப் பூவின் வாயிலாக எங்க அம்மா தருவாங்க’.

‘அப்டீன்னா காகிதப்பூ கொண்டுவரட்டுமா?’ என்றான். ‘தாராளமாகக் கொண்டு வா அதை அன்னையின் முன் வைத்து வணங்கிவிட்டு எடுத்து நம் கையிலோ சட்டைபையிலோ எடுத்து வைத்துக்கொண்டு எங்கு வேண்டுமானாலும் போகலாம்’ என்றார்.

‘அட! என்ன ஆச்சரியமாயிருக்கு? நானும் எங்க எசமானும் இராவேளைல வண்டி கட்டிக்கிட்டுப் போகும்போது காளியாத்தாவுக் குப் பணம் முடிச்சுவைப்பாங்க. அது தவறினா எதுனா கொறை வந்திடும்’ என்றான்.

‘அம்மாவைக் கும்பிடற வழிபாட்ல எந்தக் குறையும் வராது’ என்றார் ஆசிரியர்.

‘எதுனா ஊர்ல நோய் நொடி வந்தாக்கூட காளிக்குப் பலி கொடுப்பாங்க’ என்றான்.

‘அதெல்லாம் மூடநம்பிக்கை வேலு. தெய்வம் நமக்கு நல்லது செய்யுமே தவிர எந்த உயிரையும் பலி கேட்காது, எங்க அம்மாவுக்கு அதெல்லாம் பிடிக்காது நல்லது மட்டுமே செய்வார்கள்’, என்றார்.

‘ஆகா தண்டிக்காத இந்த அம்மாவை யாருக்குத்தான் பிடிக்காது? கிராமத்தில் தாமரை, அல்லி, எல்லாப் பூவும் கெடைக்கும்.

இனி தினமும் கெடைக்கற பூவையெல்லாம் கொண்டுவரேன் சார்', என்றான் உற்சாகமாய்.

'சரி நீ வீட்டிற்குப் போ தேடப் போகிறார்கள்' என்றார்.

'சரி சார் வேலையெல்லாம் முடிச்சிட்டு சும்மாயிருக்கிறப்ப வந்திடறேன்' என்றான்.

'சரி, வா, வா' என்று முதுகில் பரிவாகத் தட்டினார். ஒரே மகிழ்ச்சி வேலுவுக்கு. இவன் எஜமானரும் இவனை முதுகில் தட்டிக் கொடுப்பார். ஆனால் அது இவன் வேலையை உற்சாகப்படுத்தத் தட்டும் தட்டல். இவருடைய பரிவு அவனுக்குப் புரிந்தது.

இரவில் செட்டியார் ஊர் திரும்பியது அறிந்து அவரைப் போய்ப் பார்த்தார் ஆசிரியர்.

செட்டியார் மரியாதைக்காகவும் தன் மதிப்பைத் தெரிவித்தாற் போலவும் பழகினார்.

'வாங்க, உட்காருங்க, எலே! வேலு, வாத்தியார் ஐயாவுக்குக் குடிக்கப் பால் கொண்டு வா' என்றார் உள்ளே திரும்பி.

'அதெல்லாம் வேண்டாம் ஐயா' என்று பணிவாக மறுத்தார் ஆசிரியர்.

'இருக்கட்டும் முதன் முதலா வந்திருக்கீங்க எதுனா கொடுத்தாதான் மரியாதை' என்று உபசரித்தார். கதவுக்குப் பின்னால் நின்று எஜமானியம்மாள், 'இந்தா இதை வாத்தியாரய்யாவுக்குக் கொடு' என்று கூற, வேலு வட்டா செட்டில் பால் கொண்டு வைத்துவிட்டு தன் எசமான் பின்னால் இறுகக் கை கட்டி நின்றான். காலையில் தன்னிடம் அவ்வளவு பேசிய சிறுவனா இவன் என்று வியப்பாக இருந்தது.

'வீடெல்லாம் வசதியாயிருக்கா?' என்றார் செட்டியார். 'நல்லா வசதியாயிருக்குங்க உங்க உதவிக்கு நன்றி சொல்லிப் போகத்தான் வந்தேன்', என்றார் ஆசிரியர்.

'வேலு, சாருக்கு எது வேண்டுமானாலும் கேட்டு செய்து கொடு' என்றார் திரும்பிப் பார்த்து.



'சரிங்க எசமான்' என்றான் வேலு. புன்முறுவலுடன் விடைபெற்றார்.

மறுநாள் பள்ளிகூடம் புறப்படத் தயாரானார் ஆசிரியர். வேலு காலை பலகாரம் கொண்டுவந்தான்.

'எதுக்கு வேலு இதெல்லாம். நான்தான் ஐயர் கடையில சாப்பிட்டுக்கிறேன்னு சொன்னேனே' என்றார்.

இன்று முதன் முதலா வேலைக்குப் போறீங்க, எங்க அம்மா கையாலே சுட்ட பலகாரம் கொடுத்திருக்காங்க; மதியம் சாப்பாடும் காரியரிலே கொண்டு வந்திடுவேன், நாளையிலேந்து கடையிலே சாப்பிடலாம்' என்றான். 'நீயும் சாப்பிடுகிறாயா?' என்றார் பரிவுடன். 'வேண்டாம் சார், நீங்க சாப்பிடுங்க' என்று கூறி முன்னறையில் அம்மாவைப் பார்க்கப் புறப்பட்டுவிட்டான். மலர்ந்த சிரிப்புடன் நாற்காலியில் கம்பீரமாய் தெய்வீகமாய் அமர்ந்திருந்த அம்மாவுக்கு முன் கை கூப்பித் தொழுதான். தட்டிலிருந்து நேற்றுக் கொண்டுவைத்த காகிதப்பூவில் ஒன்றை எடுத்துக் கண்ணில் ஒற்றிய வண்ணம் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

'இன்னக்கி மாலையில் உங்களுக்குத் தாமரைப்பூ கொண்டு வரேன் அம்மா' என்று வெளியே வந்தான். 'என்ன வேலு அம்மாவிடம் பேசவே ஆரம்பிச்சுட்டியா?' என்றார் ஆசிரியர். வெட்கமாய்ச் சிரித்தான். 'அந்த அம்மாவைப் பார்த்தா போட்டோ படத்திலே பாக்குற மாதிரியில்லாம நிஜமாவே பாக்குறமாதிரியிருக்கு சார்', என்றான் நிறைவாக.

'உன்னைப்போல சுத்தமான மனசு உள்ளவங்க, திறமையா உழைக்கிறவங்க, நேர்மையா இருக்கிறவங்க கண்ணுக்கெல்லாம் நல்லாவே தெரிவாங்க!' என்றார்.

தொடரும்

❊ ❊ ❊

"Conversation"

# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - அன்னை சேவைக்குக் கோடிக்கணக்காய் பணம் வந்தது. அதாவது கொடுப்பதாகச் சொல்லியது தெரியும். கையில் வந்ததாகத் தெரியவில்லை.

அண்ணன் - சொத்தாக வருவது முடியும். சேவைக்கு வருவது கடினம்.

தம்பி - எனக்கு 1 கோடி வேண்டும். நான் செய்கிறேன்.

அண்ணன் - 1 கோடி பணமுள்ளவனுடைய திறமை - நிர்வாகம், நிதானம், பொறுமை - உனக்குண்டு. பிறரை நீ சம்பந்தப்படுத்தாவிட்டால் உன் முயற்சி பலிக்கும். எளிதன்று. ஆனால் பலிக்கும்.

தம்பி - மீண்டும் ஒருமுறை நிபந்தனைகளைக் கூறவும்.

அண்ணன் - அஜெண்டாவில் அன்னை நல்லது **goodness** என்பதைப்பற்றி 6,7 இடங்களில் கூறுகிறார்கள். அதன் சுருக்கம்:-

"நல்லவனாக இருக்கவேண்டும் என்று நேரடியாகக் கூறமுடியவில்லை என்பதால், நான் பல்வேறு வகையாக விளக்க வேண்டியிருக்கிறது". நல்லவனாக வும், திறமைசாலியாகவுமிருந்தால் அந்த அளவுக்குள்ள

* புகழ்,
* செல்வாக்கு
* பதவி
* செல்வம்
* அருள்

ஒருவனைத் தேடிவரும் என்பதே அன்னை கொள்கை யின் சுருக்கம். அருளைப்பெற பிறர் நலம் நாட வேண்டும். சாதாரண மனிதனுக்குத் தான் சம்பாதிப்பதைவிடப் பிறர் கெட்டுப்போவதில் சந்தோஷம் அதிகம்.



தம்பி - எனக்கு ஒரு கண் போனாலும்... என்ற கதை எல்லா நாடுகளிலும் கேள்விப்படுகிறோம். அவர்களை விலக்கினால், மீதி எத்தனை பேரிருப்பார்கள்?

அண்ணன் - எது வேண்டுமானாலும் அதற்குரிய தகுதியைப் பெற்றவுடன் நல்லவனுக்கு உடனே வரும் என்பது அருளின் சரித்திரம். உலகம் பணத்தை முக்கியமாகக் கருதுவதால், நாமும் அதைக் கருதுகிறோம். பணம் மட்டும் முக்கியமில்லை. முக்கியமானவை பல. அவற்றுள் பணம் ஒன்று.

40,45 வயதில் ஒருவர் இதுவரை உலகிலுள்ள பணக்காரர்களைத் தாண்டும் அளவுக்குச் சம்பாதித்து விட்டார் எனில் அருளால் அது முடியாது என நினைக்க முடியுமா?

தம்பி - இது வரை 75 பில்லியன் டாலர் ரிக்கார்ட். **Bill Gates** 100$ **Billion** சம்பாதித்துவிட்டார். இது **technology** ஆல் நடந்தது. அருளின் பல்வேறு பாகங்களில் டெக்னாலஜி ஒன்று. ஒரு பாகத்தால் முடியுமானால், முழுமையால் முடியாது எனக் கூற முடியுமா? நாம் அருளைச் சரிவரப் புரிந்து கொண்டு ஏற்கவில்லை எனப் பொருள்.

சோதனை மனத்திற்குரியது. சோதனை பலித்தால் நாள் முழுவதும் எந்தக் காரியமும் தடையாக இருக்கக் கூடாது. மனதில் கெட்ட எண்ணத்திற்கு இடம் கொடுக் காவிட்டால் கெடாது. தகுதியிருந்தால் பலன் வரும்.

அண்ணன் - சோதனை செய்வது தவறு எனக் கூறமுடியாது. ஆனால் இதை நிரூபிக்கும் நிகழ்ச்சிகள் ஏராளமாக இருக்கும்பொழுது ஏன் சோதனை? நேரடியாகப் பலனை நாடமுடியும் என்பதே என் கருத்து.

இந்த நாடார் தம்பி பல நாட்களாக வருவதில்லை. ஒரு புது **project** வந்தது. அவர் வந்தால் சொல்லலாம் என இருக்கிறேன்.

தம்பி – நான் அவரைக் கூப்பிடட்டுமா?

அண்ணன் – நாமாகக் கூப்பிட்டு **project** ஐப் பற்றிச் சொன்னால் அது பலிக்காது என்று தெரியுமே.

தம்பி – ஆமாம்.

அண்ணன் – நான் இதை நம் தாசீல்தாரிடம் சொன்னேன். அவர் அன்னையிடம் சொல்வதாகச் சொன்னார். ஒரு ½ மணியில் நாடார் தம்பி வந்தார். ரொம்ப நல்ல மனசு. பொதுவாக அவர் வந்தால் நல்லது நடக்கும். இன்றும் அது போலிருந்தது. நாம் 4வருஷமாக எதிர்பார்த்த காண்ட்ராக்ட் வந்தது. அத்துடன், வழக்கத்திற்கு மாறாக, அவரே முன்பணம் தருவதாகச் சொன்னார். இதுபோன்ற இடங்களில் அன்னையை நம்மவர் விவரமாக அறிவதில்லை.

தம்பி – நீங்கள் சொல்வது **organisation of consciousness** அன்னை ஜீவியத்தின் சிறப்பைப் பற்றித்தானே.

அண்ணன் – ஒரு வகையில் இது பெரிய ஆத்ம ஞானம். வேறு வகையாகப் பார்த்தால் எல்லோருக்கும் தெரிந்த எளிய விஷயம்.

தம்பி – சிறியதில் பெரியதை அறிவதுதான் ஆத்ம ஞானம் என்று கூறுகிறாரே, இதையே வேறு வகையாகவும் கூறலாமன்றோ? “எந்த முறை நமக்குப் பெரும்பலன் தருகிறதோ அதை அன்னையிடம் நாம் பின்பற்றினால் போதும்” என்று சொல்லலாமன்றோ?

அண்ணன் – நம் வீட்டில் ஒரு முக்கியக்காரியம் என்றால் உ-ம், இப்பொழுது வந்துள்ள காண்ட்ராக்ட் 5 கோடி நமக்குப் பெரியது. யாரும் தானே அட்வான்ஸ் தருவதில்லை. இவர் 5 லட்சம் தருவதாகச் சொல்கிறார். இது கூடிவர நாம் முதற்காரியமாக இதை எவரிடமும் சொல்வதில்லை. குறிப்பாகக் காண்ட்ராக்ட் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்வதில்லை. நம் டிரைவர் தம்பி வந்தால் நமக்கு ஒத்து வருவதில்லை என்பதால் இந்த காண்ட்ராக்ட் கையெழுத்தாகும்வரை அவனைச் சேர்ப்பதில்லை. இது நாம் மட்டும் செய்யும் காரியங்களில்லை. காரியம் முக்கியமானால், யாரும் ஜாக்கிரதையாக இருப்பார்கள். இரண்டாம் மனிதரிடம் சொல்லமாட்டார்கள். இதேபோல் அன்னையிடம் நாமிருந்தால் எல்லாக் காரியங்களும் கூடிவரும், அங்கு இந்த ஜாக்கிரதையிருப்பதில்லை. சற்று அலட்சியமாக இருக்கிறோம், காரியம் தவறிவிடுகிறது. “இதெல்லாம் பார்த்தால் முடியுமா?'' என நம் காரியத்தில் சொல்வதில்லை. அன்னை விஷயத்தில் சொல்கிறோம்.

தம்பி – நீங்கள் சொல்வது புரியாது. நாடார் தம்பியை வரச்சொல்லி தாசீல்தார் அன்னையிடம் சொன்னார், வந்தார். அதுபோன்ற உதாரணத்து மூலம் சொன்னால் புரியும்.

அண்ணன் – நாடார் தம்பி வருமுன் காண்ட்ராக்ட் சேதி வந்தது. எனக்குச் சந்தோஷம். போனில் தம்பியைக் கூப்பிட்டு “நீங்கள் வந்தீர்கள். நல்லது நடக்கிறது” என்றேன். போனை வைத்தவுடன் பாக்டரியில் குடித்துவிட்டு கலாட்டா என்று ஒரு செய்தி, பகலில் வீட்டில் திருடன் வந்தான் என்று வேறொரு செய்தி. எனக்கு என் பக்கத்திலிருந்து காரணம் தெரியும். ஸ்ரீ அரவிந்தர் நிதானம் **equality**யை வற்புறுத்துகிறார். தம்பி வந்தது சரி. அவர் போனபின் அவரிடம் நல்ல செய்தி வந்ததாகக் கூறவேண்டும் என்று **ஆசை**. கூறினேன்.

உடனே விஷயம் தலைகீழாகப்போய் கலாட்டா, திருடு வருகிறது.

தம்பி - நல்ல விஷயத்தைச் சொல்லி சந்தோஷப்படுவதும் **ஆசை** என்ற அளவில் உங்களைப் பாதிக்கிறது. அதெல்லாம் என்னைப் பாதிப்பதில்லை. அதுபோல் சொன்னால் நல்லது நடக்கும். நான் சிறியவன். பாராட்டுவதே எனக்குப் பக்குவம். உங்களுக்கு அன்னை அதையும் அனுமதிக்கவில்லை.

தொடரும்

❈ ❈ ❈

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தெரிந்ததைக் கொண்டு தெரியாததை நம்புவது, நம்பிக்கை எனப்படும்.

தெரியாததைக் கொண்டு தெரிந்ததை மறுப்பது சந்தேகம்.

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**
**Editor: Karmayogi**

## ‘மாப்பிள்ளை’

தானெனும் ஆணவமுள்ள பெரிய மனிதர்கள் சிலரைப்பற்றி ஒரு வழக்குண்டு. “திருமணத்திற்குப் போனால் மாப்பிள்ளையை விட இவருக்கு முக்கியத்துவம் தேடுவார், துக்கத்திற்குப் போனாலும் இறந்தவரைவிட தமக்கு முக்கியத்துவம் தேடுவார். எங்குப் போனாலும் தாமே முதன்மையாக இருக்க விரும்புவார்” என்பது அவ்வழக்கு. இதுபோன்றவர் பெண்ணுக்குத் திருமணம் செய்த பின்னும், தாமே “மாப்பிள்ளை” யாக நடந்து கொள்வார்கள்.

போகுமிடமெல்லாம் முதன்மையாக இருக்க விரும்புவதாகச் சர்ச்சில், முன்ஷியைப் பற்றிச் சொல்வார்கள். சர்ச்சில் அபாரத் தைரியசாலி. முன்ஷி அறிவின் சிகரம். ஏதாவது ஒரு நல்ல அம்சம் மிக உயர்வாக இருப்பவர்களுக்கே இக்குணம் இருக்கும். அளவுகடந்த நல்ல குணமும், உதவி மனப்பான்மையும் உள்ளவர் ஒருவர், ஏராளமான புத்தகங்களை எழுதிய புத்திசாலி ஒருவர், ஓர் எலக்ஷன் கூட தவறாமல் ஜெயித்த அரசியல்வாதி ஒருவர் இக்குணம் உடையவர்களில் சிலர்.

இவர்கள் அன்னையிடம் வந்தால், அரசியல் தொண்டரானால், முதன் மந்திரியாவார். உலகப்பிரசித்தி பெறுவார்கள். அளவுகடந்த பெருஞ் செல்வம் பெறுவர். தங்கள் உயர்ந்த குணங்களை வீணடிக்கும் ‘‘முதன்மை’’ மனப்பான்மையை இவர்கள் மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். அதைச் செய்வது அரிது.

அப்படிப்பட்டவர் தம் பெண்ணுக்குத் திருமணம் முடித்து மாப்பிள்ளையை வீட்டிற்கு அழைத்து வந்தார். வீட்டிலுள்ள அனைவரும் அன்று மாலை “மாப்பிள்ளை” கோபமாக இருக்கிறார் என்று பதட்டத்துடன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த புதியவர் வியந்து, “மாப்பிள்ளை சந்தோஷமாக முன்கட்டில் பேசிக்கொண்டிருக் கிறார்” என இடைமறித்துச் சொல்லியபொழுது, அவரை அருகில் அழைத்து ‘‘எங்கள் வீட்டில் மாப்பிள்ளை என்பது பெண்ணின் தகப்பனார்’’ என்று ஒருவர் விளக்கமளித்தார்.

## பிரார்த்தனை பலிக்குமா?

தன் முயற்சி ஜெயிக்கும்வரை மனிதனுக்குத் தெய்வம் நினைவு வருவதில்லை. அது தோற்றபின் பிரார்த்தனை நினைவு வரும். அப்பொழுதும் தோற்ற தன் முயற்சி பலிக்கவேண்டும் என்று தோன்றுமே தவிர காரியம் கூடி வரவேண்டும் என்று தோன்றுவதில்லை.

இன்டர்வியூக்குப் போய் வந்தபின் தேறவில்லை என்றால், தேறவேண்டும் எனப் பிரார்த்திப்பான். வேலை கிடைக்க வேண்டும் என்பதைவிட இன்டர்வியூவில் தான் சொல்லிய பதிலை ஏற்க தெய்வம் அருள் செய்ய வேண்டும் என்பதே மனதிலிருக்கும்.

பொதுவாக அன்னையை நாடிப் பிரார்த்தனையை எடுத்து வருபவர்கள், இதுவரை எந்தத் தெய்வத்திடமும் பலிக்காத பிரார்த்தனையுடன் வருவார்கள். முதலில் அன்னையை நாடுவது பெரும்பாலும் இது போலத்தானிருக்கும்.

வயது வந்த பெண். வேலைக்குப் போகிறாள். அவள் மீது எந்தக் குறையும் எப்பொழுதும் யாரும் கூறியதில்லை. பெண் பொறுமைசாலி. முணுமுணுப்பவளில்லை. அவளுக்கு குறையிருந்த தாகத் தெரியவில்லை. ஒரு நாள் காலையில் எழுந்தால், பெண்ணை வீட்டில் காணோம். தேடிய இடத்தில் எல்லாம் எந்தத் தடயமும் இல்லை. இந்தப் பெண் ஓடிப் போனாள் என்றாலும் பரவாயில்லை. எங்காவது நன்றாக இருக்கிறாள் என்று செய்தி கிடைத்தால் போதும் என்ற மனநிலைக்கு பல மாதம் கழித்து பெற்றோர் வந்துவிட்டார்கள். இவள் ஓடிப் போகும் பெண்ணல்லள் என்பதே அனைவருடைய கணிப்பு. 1½ ஆண்டு ஓடியது. அன்னையை அறிந்தனர். பிரார்த்திக்க மையம் தேடி வந்தனர். பிரார்த்தனை தவறாது பலிக்கும், உடனேயும் பலிக்கும் என்று அறிந்தனர். பிரார்த்தனை செய்தனர். 7ஆம் நாள் பெண்ணிடமிருந்து போன் வந்தது. எல்லாம் நல்ல செய்தி, திருமணம் செய்துகொண்டு நல்லமுறையில் வாழ்கிறாள்!

**உடனே பலிப்பது அன்னை முத்திரை.**